# செயலாக்கத் திட்டம் – 2011–2012

## குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பிரிவு முக்கிய பங்கு வகிக்கிறது. இப்பிரிவானது நாட்டின் தொழில் உற்பத்தியில் 45 விழுக்காடும், மொத்த தொழில் அலகுகளில் 95 விழுக்காடும், மற்றும் ஏற்றுமதியில் சுமார் 40 விழுக்காடும் பங்களிக்கிறது. தமிழ்நாட்டில் 31.3.2011 வரை, சுமார் 6.89 லட்சம் பதிவு பெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் 47.97 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளித்து சுமார் ரூ.32008.00 கோடி மொத்த முதலீட்டுடன் உள்ளது. மேலும், விவசாயத்திற்கு அடுத்தபடியாக இப்பிரிவே அதிக வேலை வாய்ப்பு அளித்து வருகிறது.

மாநில பொருளாதாரத்தில் சிறு தொழில்களின் பங்கை கருத்தில் கொண்டு தொழில் துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டு 14.7.1993 முதல் ‘சிறு தொழில்கள் துறை’ உருவாக்கப்பட்டது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பிரிவின் நெடுங்கால கோரிக்கையினை ஏற்கும் வகையிலும், இப்பிரிவின் முன்னேற்றங்களுக்கு ஒரு சட்டப்பூர்வ வடிவமைப்பை ஏற்படுத்தி உதவும் பொருட்டும், மத்திய அரசு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டு சட்டம், 2006ஐ இயற்றி 2.10.2006 முதல் அமலாக்கியது. மேலும், மத்திய அரசின் கொள்கையை ஒத்து முன்பிருந்த ‘‘சிறு தொழில் துறை’’, ‘‘குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை’’ என 22.02.2008 முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான கொள்கை வகுத்தலும் மற்றும் அவற்றுக்காக புதிய திட்டங்களை உருவாக்குதலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் பணியாகும். தொழில் வணிக ஆணையரகம், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (இடிஐ), தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி) ஆகியன குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.

தொழில் வணிக ஆணையரகம், மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்காக, குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான பல்வேறு திட்டங்களை பொது மேலாளர், மாவட்ட தொழில் மையங்கள் மற்றும் மண்டல இணை இயக்குநர், சென்னை ஆகியோர் மூலமாக செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கென தொழிற்பேட்டைகளை அமைத்து வருகிறது. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் அறைகலன்கள், தளவாடங்கள், கைப்பம்புகள் மற்றும் இதர பொருட்களைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், ஆர்வமுள்ள தொழில் முனைவோருக்கு,

குறிப்பாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முனைவோருக்கு உதவும் பயிற்சி நிறுவனமாக செயல்படுகிறது.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கான, குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்கான களமுகமையாக தொழில் வணிக ஆணையரகம் விளங்குகிறது. இத்துறை மாநிலத்தில் தொழில் முன்னேற்றத்திற்கென பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்துவதில் முக்கியப் பணியாற்றி வருகிறது.

தொழில் வணிக ஆணையரகம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சி, நவீனமயமாக்குதல், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தரக்கட்டுப்பாடு ஆகியவை சார்ந்த திட்டங்களுக்கு நிதியுதவி, தொழில்நுட்ப உதவி மற்றும் வழிகாட்டிச் சேவை போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அரசினால் ஒப்புதலளிக்கப்படும் வரவு செலவு திட்டங்களைச் செயல்படுத்தும் அரசு நிறுவனங்களான தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (TANSI), தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO), தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT), தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC), தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO), தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் (EDI) ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்கீடு செய்தல் மற்றும் நிதியினைப் பெற்றுத்தருதல் ஆகிய பணிகளையும் இந்த ஆணையரகம் மேற்பார்வையிட்டு செயல்படுத்தும் பணியை மேற்கொள்கிறது.

## 2. தொழில் வணிக ஆணையரகத்தின் பல்வேறு செயல்பாடுகள்

1. தொழில் முனைவோருக்கு புதிய தொழில் வாய்ப்புகளைக் கண்டறிந்து, அவற்றிற்கான திட்ட அறிக்கைகள் தயாரித்து, நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் மூலம் நிதி வசதி பெற்றுத் தருதல், இயந்திரங்களைத் தேர்ந்தெடுத்து கொள்முதல் செய்ய உதவுதல் போன்ற வழிகாட்டுச் சேவைகள் புரிதல்.
2. கருத்தரங்குகள் மற்றும் தகவல் கூட்டங்கள் நடத்துவதன் மூலம் மைய / மாநில அரசுகளின் தொழில் மேம்பாடு குறித்த கொள்கைகள், திட்டங்கள் குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
3. தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
4. தொழில் துவங்கத் தேவையான அரசு துறை சார்ந்த உரிமங்களை ஒரு முனைத் தீர்வுக் குழுக் கூட்டம் (Single Window Clearance Committee) மூலம் பெற்றளித்தல்.
5. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான தொழில்முனைவோர் பதிவேடு பகுதி–I மற்றும் பகுதி–II –க்கான ஒப்புகைச் சான்று வழங்குதல் .
6. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகை மற்றும் மானியம் வழங்குதல்.
7. பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் (PMEGP) கீழ் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான குறிப்பாக ஏழைகளுக்கான சுய தொழில் கடன்களை மானியத்துடன் வங்கிகள் மூலம் வழங்கும் மைய அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

8. தொழில் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (IIUS) / குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான குழும வளர்ச்சித் திட்டம் (MSE-CDP) / பாரம்பரியத் தொழில்களின் புத்துணர்ச்சிக்கான நிதித் திட்டம் (SFURTI) ஆகியவற்றின் கீழ் பொதுக் கட்டமைப்பு வசதிகள் / சேவைகளைத் தொழில் குழுமங்களில் உருவாக்கிட உதவுதல்.

9. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு வினியோகம் செய்து பட்டுவாடா செய்யப்படாமல் உள்ள இனங்களில் நிலுவைத் தொகையை பெற்றளித்தல்.

10. வேதியியல், உலோகம், உலோகப் பொருட்கள், மின் மற்றும் மின்னணுக் கருவிகள் மற்றும் உபகரணங்களுக்கான பரிசோதனை வசதிகளை அளித்தல்.

11. இலகு ரகப் பொறியல் தொழில்கள், கருவி மற்றும் அச்சு வடிவமைப்பு, கண்ணாடி கருவிகள் உருவாக்குதல் ஆகிய தொழில்களில் பயிற்சி வசதிகள் அளித்தல்.

12. மின் மற்றும் மின்னணுத் தொழில்களுக்கான தனித் தொழிற்பேட்டைகளை பராமரித்தல்.

13. தகவல் வங்கி, மாவட்டத் தொழில் மையங்களுடன் இணைக்கப்பட்ட தகவல் மையம் மற்றும் தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள் மூலமாகத் தொழில் முனைவோருக்கான வழிகாட்டுதல்கள் அளித்தல்.

14. வீட்டு உபயோக மின் சாதனங்களுக்கான தரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துதல்.

15. குடிசைத் தொழில் மற்றும் கைவினைத் தொழில்களை உருவாக்கி மேம்படுத்துதல்.

16. மாவட்டத் தொழில் மையங்களிலுள்ள ஏற்றுமதி வளர்ச்சிப் பிரிவின் மூலம் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

17. நலிவடைந்த குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களை புனரமைப்பதற்கான விண்ணப்பங்களை பரிசீலித்தல் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

18. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான மாநில / மைய அரசு அறிவிக்கும் சிறப்பு நிதியுதவித் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடுதல்.

19. குறு, மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு மத்திய / மாநில அரசுகளின் விருதுகள் வழங்க நடவடிக்கை எடுத்தல்.

20. தொழில் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் மேம்படுத்துதல்.

21. தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு தாய்கோ வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்கள் மூலம் நிதிஉதவி அளித்தல்.

22. மாநிலத்தின் கயிறுத் தொழிலுக்கான ஸ்புரூட்டி, ரிமோட் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகளை கண்காணித்தல்.

## பகுதி – ஆ

## பிற்சேர்க்கை–1

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

## திட்டம் மற்றும் திட்டம் சாரா ஒதுக்கீடுகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | விவரங்கள் | 2009–10 இல் செலவு | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2010–11 | திருத்தப்பட்ட திட்ட மதிப்பீடு 2010–11 | திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2011–12 |
|---|---|---|---|---|---|
| 1 | திட்டத்தில் சேராதவை | 367298 | 544659 | 459217 | 482282 |
| 2 | திட்டத்தில் சேர்ந்தவை | 362115 | 437951 | 724929 | 795272 |
| | **மொத்தம்** | **729413** | **982610** | **1184146** | **1277554** |

பிற்சேர்க்கை–2

வரவு–செலவு சுருக்கம்

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | திட்ட வகை பற்றிய விவரங்கள் | 2009–10 இல் செலவு | | | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2010–11 | | | திருத்தப்பட்ட திட்ட மதிப்பீடு 2010–11 | | | திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2011–12 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் |
| 1 | மாநிலத் திட்டங்கள் | 367298 | 313518 | 680816 | 544659 | 426509 | 971168 | 459217 | 706878 | 1166095 | 482282 | 778201 | 1260483 |
| 2 | மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் | 0 | 38346 | 38346 | 0 | 6980 | 6980 | 0 | 6607 | 6607 | 0 | 7296 | 7296 |
| 3 | மைய, மாநில அரசுகள் செலவை ஏற்கும் திட்டங்கள் | 0 | 10251 | 10251 | 0 | 4462 | 4462 | 0 | 11444 | 11444 | 0 | 9775 | 9775 |
| மொத்தம் | | **367298** | **362115** | **729413** | **544659** | **437951** | **982610** | **459217** | **724929** | **1184146** | **482282** | **795272** | **1277554** |

## பிற்சேர்க்கை–3

## நிதி ஆதாரம்

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | முக்கிய தலைப்புகள் | 2009–10 இல் செலவு | | | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2010–11 | | | திருத்தப்பட்ட திட்ட மதிப்பீடு 2010–11 | | | திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2011–12 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் |
| 1 | 2851. கிராம மற்றும் சிறு தொழில்கள் | 296966 | 355445 | 652411 | 449826 | 436645 | 886471 | 371591 | 716957 | 1088548 | 384348 | 788069 | 1172417 |
| 2 | 2852. தொழில்கள் | 51202 | 0 | 51202 | 70930 | 0 | 70930 | 63701 | 0 | 63701 | 71992 | 0 | 71992 |
| 3 | 2885. தொழில்கள், கனிமப் பொருள்கள் குறித்த ஏனைய செலவுகள் | 0 | –110 | –110 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 4 | 3451. தலைமைச் செயலகம் – பொருளாதாரப் பணிகள் | 19130 | 0 | 19130 | 23903 | 0 | 23903 | 23925 | 0 | 23925 | 25941 | 0 | 25941 |
| 5 | 4425. கூட்டுறவு சங்கங்களுக்கான முதலீட்டுச் செலவு | 0 | 986 | 986 | 0 | 1302 | 1302 | 0 | 1302 | 1302 | 0 | 2 | 2 |
| 6 | 4551. மலைப்பகுதிகள் குறித்த முதலீட்டுச் செலவு | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 7 | 4851. கிராமம் மற்றும் சிறு தொழில்களின் மீதான முதலீட்டுச் செலவு | 0 | 5794 | 5794 | 0 | 3 | 3 | 0 | 6670 | 6670 | 0 | 7201 | 7201 |
| 8 | 7610. அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 |
| மொத்தம் | | 367298 | 362115 | 729413 | 544659 | 437951 | 982610 | 459217 | 724929 | 1184146 | 482282 | 795272 | 1277554 |

பிற்சேர்ச்சை–4

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன துறைக்கு நிதி 2010–11 மற்றும் 2011–12 (ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | திட்டங்கள் பற்றிய விவரங்களும் நடவடிக்கை வகைகளும் (குறுந் தலைப்பு) | 2009–10 இல் செலவு | | | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2010–11 | | | திருத்தப்பட்ட திட்ட மதிப்பீடு 2010–11 | | | திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2011–12 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் |
| | அ. மாநிலத் திட்டங்கள் | | | | | | | | | | | | |
| I | தலைமைச் செயலகம் (090) | 19130 | 0 | 19130 | 23903 | 0 | 23903 | 23925 | 0 | 23925 | 25941 | 0 | 25941 |
| II | நெறிப்படுத்தலும் நிருவாகமும் (001) | 51202 | 0 | 51202 | 70773 | 0 | 70773 | 63700 | 0 | 63700 | 71990 | 0 | 71990 |
| III | தொழிற்பேட்டைகள் (101) | 4385 | 2000 | 6385 | 5664 | 1004 | 6668 | 6060 | 1003 | 7063 | 6034 | 2 | 6036 |
| IV | சிறு தொழில்கள் (102) | 176092 | 1068 | 177160 | 242821 | 12788 | 255609 | 202756 | 51214 | 253970 | 224202 | 75186 | 299388 |
| IV (அ) | மானியங்கள் (102) | 77829 | 312082 | 389911 | 150002 | 411404 | 561406 | 120035 | 477401 | 597436 | 105001 | 533002 | 638003 |
| V | கட்டணத்தையும் விலையையும் முறைப்படுத்தல் (103) | 0 | 0 | 0 | 157 | 0 | 157 | 1 | 0 | 1 | 2 | 0 | 2 |
| VI | தென்னை நார்த் தொழில்கள் (106) | 0 | 0 | 0 | 0 | 10 | 10 | 0 | 5958 | 5958 | 0 | 9 | 9 |
| VII | ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் முதலீடு (108) | 0 | 986 | 986 | 0 | 1302 | 1302 | 0 | 1302 | 1302 | 0 | 2 | 2 |
| VIII | கூட்டுக் கிராம–சிறு தொழில்கள், கூட்டுறவுச் சங்கங்கள் (110) | 38660 | 0 | 38660 | 51339 | 0 | 51339 | 42740 | 0 | 42740 | 49111 | 0 | 49111 |
| IX | கூட்டுறவு நிறுவனங்களில் முதலீடு (195) | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| X | வீடு கட்ட முன்பணம் (201) | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 |
| XI | கழிக்கவும் – மிகையாக கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல் (911) | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 170000 | 170000 | 0 | 170000 | 170000 |
| XII | கட்டணத்தையும் விலையையும் முறைப்படுத்தல் (103) | 0 | –2618 | –2618 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | மொத்தம் | **367298** | **313518** | **680816** | **544659** | **426509** | **971168** | **459217** | **706878** | **1166095** | **482282** | **778201** | **1260483** |
| | ஆ. மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் | | | | | | | | | | | | |
| I | நெறிப்படுத்தலும் நிருவாகமும் (001) | 0 | 5145 | 5145 | 0 | 6980 | 6980 | 0 | 6607 | 6607 | 0 | 7296 | 7296 |
| II | சிறு தொழில்கள் (102) | 0 | 32823 | 32823 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| III | ஏனைய செலவு (800) | 0 | 378 | 378 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| | மொத்தம் | **0** | **38346** | **38346** | **0** | **6980** | **6980** | **0** | **6607** | **6607** | **0** | **7296** | **7296** |
| | இ. மைய மாநில அரசுகள் செலவை ஏற்கும் திட்டங்கள் | | | | | | | | | | | | |
| I | சிறு தொழில்கள் (102) | 0 | 5794 | 5794 | 0 | 2 | 2 | 0 | 6669 | 6669 | 0 | 5000 | 5000 |
| II | கூட்டுக் கிராம–சிறு தொழில்கள், கூட்டுறவுச் சங்கங்கள் (110) | 0 | 4457 | 4457 | 0 | 4460 | 4460 | 0 | 4775 | 4775 | 0 | 4775 | 4775 |
| | மொத்தம் | **0** | **10251** | **10251** | **0** | **4462** | **4462** | **0** | **11444** | **11444** | **0** | **9775** | **9775** |
| | ஆக மொத்தம் | **367298** | **362115** | **729413** | **544659** | **437951** | **982610** | **459217** | **724929** | **1184146** | **482282** | **795272** | **1277554** |

## பிற்சேர்க்கை–5

## நோக்கம் வாரியான செலவு வகைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | நோக்கம் | 2009–10 இல் செலவு | | | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2010–11 | | | திருத்தப்பட்ட திட்ட மதிப்பீடு 2010–11 | | | திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2011–12 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் |
| 1 | சம்பளம் | 186019 | 3490 | 189509 | 288523 | 5348 | 293871 | 222191 | 5597 | 227788 | 239676 | 5824 | 245500 |
| 2 | கூலி | 531 | 0 | 531 | 15 | 0 | 15 | 124 | 0 | 124 | 111 | 0 | 111 |
| 3 | அகவிலைப்படிகள் | 74447 | 1491 | 75938 | 75057 | 1405 | 76462 | 78629 | 2099 | 80728 | 105795 | 2669 | 108464 |
| 4 | பயணச் செலவுகள் | 3035 | 163 | 3198 | 4659 | 237 | 4896 | 5588 | 200 | 5788 | 5050 | 200 | 5250 |
| 5 | அலுவலகச் செலவுகள் | 7084 | 2 | 7086 | 7303 | 1 | 7304 | 8334 | 3126 | 11460 | 8054 | 3126 | 11180 |
| 6 | வாடகை, கட்டணம் மற்றும் வரிகள் | 2065 | 0 | 2065 | 2223 | 0 | 2223 | 3525 | 0 | 3525 | 2634 | 0 | 2634 |
| 7 | வெளியீடுகள் | 8 | 0 | 8 | 18 | 0 | 18 | 16 | 0 | 16 | 16 | 0 | 16 |
| 8 | விளம்பரச் செலவுகள் | 731 | 701 | 1432 | 2364 | 1 | 2365 | 2510 | 4375 | 6885 | 991 | 4375 | 5366 |
| 9 | உதவித் தொகை | 0 | 40794 | 40794 | 2 | 17963 | 17965 | 2 | 61378 | 61380 | 2 | 76087 | 76089 |
| 10 | பங்குத் தொகை | 25 | 0 | 25 | 46 | 1 | 47 | 25 | 0 | 25 | 25 | 0 | 25 |
| 11 | மானியங்கள் | 77829 | 312082 | 389911 | 150002 | 411404 | 561406 | 120035 | 627401 | 747436 | 105001 | 683002 | 788003 |
| 12 | படிப்பு உதவித் தொகை | 41 | 0 | 41 | 60 | 1 | 61 | 50 | 0 | 50 | 50 | 0 | 50 |
| 13 | பெரும் பணிகள் | 0 | 5794 | 5794 | 0 | 3 | 3 | 0 | 6671 | 6671 | 0 | 7202 | 7202 |
| 14 | சிறிய பணிகள் | 3102 | 0 | 3102 | 2831 | 1301 | 4132 | 2831 | 1301 | 4132 | 990 | 1 | 991 |
| 15 | பராமரிப்பு | 45 | 0 | 45 | 500 | 0 | 500 | 500 | 0 | 500 | 525 | 0 | 525 |
| 16 | இயந்திரங்களும், தளவாடங்களும் | 4475 | 0 | 4475 | 2816 | 7 | 2823 | 3141 | 5 | 3146 | 1737 | 5 | 1742 |
| 17 | மோட்டார் வாகனங்கள் | 198 | 0 | 198 | 378 | 1 | 379 | 882 | 0 | 882 | 996 | 0 | 996 |
| 18 | முதலீடுகள் | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 19 | கடன்கள் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 20 | பொருட்கள் | 695 | 0 | 695 | 811 | 0 | 811 | 811 | 0 | 811 | 812 | 0 | 812 |
| 21 | தள்ளுபடிகள் | 528 | 0 | 528 | 0 | 0 | 0 | 7 | 0 | 7 | 0 | 0 | 0 |
| 22 | தொழில் முறை சிறப்பு பணிகளுக்கு தொகை கொடுத்தல் | 1510 | 0 | 1510 | 1098 | 0 | 1098 | 3006 | 0 | 3006 | 1959 | 0 | 1959 |
| 23 | இதர கட்டணங்கள் | 136 | 0 | 136 | 200 | 1 | 201 | 200 | 0 | 200 | 200 | 0 | 200 |
| 24 | வாகன எரிபொருள், எண்ணெய் | 2186 | 0 | 2186 | 2833 | 0 | 2833 | 3200 | 0 | 3200 | 3200 | 0 | 3200 |
| 25 | பண்டிகை முன்பணம் | -1079 | 1 | -1078 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 26 | இழப்பீடு உதவித் தொகை | 0 | 0 | 0 | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | 1 | 0 | 1 |
| 27 | பரிசுகள் அளித்தல் | 1243 | 0 | 1243 | 623 | 0 | 623 | 751 | 0 | 751 | 751 | 0 | 751 |
| 28 | நிலங்கள் | 333 | 0 | 333 | 1 | 0 | 1 | 1 | 0 | 1 | 1 | 0 | 1 |
| 29 | புத்தகங்கள் மற்றும் கால வெளியீடுகள் | 0 | 0 | 0 | 4 | 0 | 4 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 30 | அச்சடித்தல் | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 3 | 0 | 3 | 3 | 0 | 3 |
| 31 | பயிற்சி | 679 | 590 | 1269 | 59 | 126 | 185 | 51 | 12626 | 12677 | 51 | 12631 | 12682 |
| 32 | கணினி மற்றும் உதிரி பாகங்கள் | 1432 | 153 | 1585 | 2230 | 150 | 2380 | 2804 | 150 | 2954 | 3651 | 150 | 3801 |
| 33 | கழிக்கவும் – திருப்பி வசூலிப்பவை | 0 | -3146 | -3146 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| **மொத்தம்** | | **367298** | **362115** | **729413** | **544659** | **437951** | **982610** | **459217** | **724929** | **1184146** | **482282** | **795272** | **1277554** |

# தொழில் வணிக ஆணையரகம்

## 1. இயக்குதல், மேற்பார்வை மற்றும் கொள்கை வகுத்தல்

தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், ஆணையரகத்தின் தலைமைப் பொறுப்பு வகிக்கிறார். அவருக்கு உதவியாக ஒரு கூடுதல் ஆணையர், இரு கூடுதல் இயக்குநர்கள், ஆறு இணை இயக்குநர்கள், ஒரு முதன்மைக் கணக்கு அலுவலர் மற்றும் தொழில்நுட்ப / தொழில்நுட்பம் சாராத பணியாளர்கள் பணிபுரிகின்றனர். அனைத்து சார்பு அலுவலர்களும் செயல்முறை அடிப்படையில் பணிபுரிகின்றனர். இவர்களுக்கு மாநில அளவிலான அதிகாரம் உண்டு.

## 2. மாவட்டத் தொழில் மையங்கள்

மொத்தமுள்ள 32 வருவாய் மாவட்டங்களில், 30 மாவட்டங்களில் மாவட்ட தொழில் மையங்களும் மற்றும் சென்னை மாவட்டத்தில் மண்டல இணை இயக்குநர் அலுவலகமும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு தொழில் துவங்க தேவையான உதவிகளைச் செய்து வருகின்றன. அரியலூர் மாவட்டத்தின் பணிகளை பெரம்பலூரில் உள்ள மாவட்ட தொழில் மையம் மேற்கொண்டு வருகிறது. தொழில்நுட்ப களப்பணி அலுவலர்கள் மற்றும் செயல் மேலாளர்களின் துணையுடன் செயல்படும் பொது மேலாளர்களால் மாவட்டத் தொழில் மையங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. தொழில்முனைவோர்கள் புதிய தொழில் நிறுவனங்கள் துவங்கவும், ஏற்கனவே செயல்பட்டு வரும் நிறுவனங்கள் முன்னேற வழிகாட்டுதல்கள் செய்வதும் பொது மேலாளர்களின் பொறுப்பாகும். மேலும், பொருளாதார மாற்றத்திற்கேற்றவாறு மாவட்டத்தில் புதிய தொழில் வாய்ப்புகளைக் கண்டறிந்து வழி நடத்துதலும் இவர்களது பொறுப்பாகும்.

## 3. இரசாயனப் பிரிவு

தொழில் வணிகத் துறையின் இரசாயனப் பிரிவு தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு இரசாயனத் தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவித்து பல சேவைகளை ஆற்றி வருகிறது. அது மட்டுமின்றி இரசாயனப் பிரிவு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பயனடையும் பொருட்டு கீழ்கண்ட வசதிகளை வழங்கிவருகிறது.

அ) மூலப் பொருட்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் இரசாயன மற்றும் இயந்திர இயல்புகளையும் பரிசோதனை செய்து வருகிறது.

ஆ) கண்ணாடிப் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் திறன்வரைவித்தல் வசதியையும் வழங்குகிறது.

இ) தொழில்நுட்ப கல்வித் தகுதி பெற்ற நபர்கள் கேட்டுக்கொள்வதின் பேரில் வேதியியல் பொருட்களை பரிசோதனை செய்வதற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஈ) புதிய தொழில் முனைவோருக்கு இரசாயனம் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்களின் திட்ட அறிக்கைகளை வழங்கிவருகிறது.

உ) இரசாயனம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களுக்கான தொழில்நுட்ப மற்றும் தொழிலக தகவல்களை வழங்கிவருகிறது.

ஊ) குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான டி.எல்.2 மற்றும் ஆர்.எல் உரிமம் வழங்குவதற்கு, மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரகத்திற்கு தேவையான உதவிகளை வழங்கி வருகிறது.

**4. மின் மற்றும் மின்னணுப் பிரிவு**

தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், தொழில் வணிகத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் மின் மற்றும் மின்னணுப் பிரிவு, தமிழ் நாட்டில் மின் மற்றும் மின்னணுத் தொழில்களின் வளர்ச்சிக்கு கீழ்காணும் வசதிகளை அளிக்கிறது:-

1. தொழில் முனைவோர்களுக்கு தொழில் நுட்பம் மற்றும் தொழில் சார்ந்த தகவல்களை அளித்தல்.
2. தொழில் திட்டங்களைத் தயாரித்து அளித்தல்.
3. தொழில் முனைவோர்கள் தாங்கள் தயாரித்த மின்சார சாதனங்களைச் சோதனை செய்யும் வசதி அளித்தல்.
4. தரக்கட்டுப்பாட்டு ஆணைகளை அமலாக்குதல்.

இதுதவிர, மாநிலத்தில் உள்ள எட்டு மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டைகளையும் இப்பிரிவு பராமரித்து வருகிறது.

**5. புள்ளி விவர மையக்கரு பிரிவு**

தொழில் வணிகத் துறையின் கீழ் செயல்படும் "புள்ளி விவர மையக்கரு" பிரிவு தனது முதன்மை செயலாக்கமான குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் "புள்ளி விவரங்கள் கணக்கெடுப்பு மற்றும் விவர கணக்கெடுப்பு" ஆகியவைகளை மாதிரி கணக்கெடுப்பு மூலம் செயல்படுத்தி வருகிறது.

மேலும், இதுநாள் வரை 3 அகில இந்திய புள்ளி விவர கணக்கெடுப்பு பணிகள் சிறு தொழில் பிரிவு நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளது. நான்காவது அகில இந்திய புள்ளி விவர கணக்கெடுப்புப் பணி, மே 2008ல் சென்னையிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் வளர்ச்சி நிறுவனம் மேம்பாட்டு மையம் மற்றும் புள்ளி விவரத் துறை அலுவலர்கள் மற்றும் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட புள்ளி விவர கணக்கெடுப்பாளர்கள் ஆகியோரின் முழு ஒத்துழைப்புடன் இந்திய அரசின் வளர்ச்சி ஆணையர் (குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்), புதுடெல்லி அவர்களின் வழிகாட்டுதலின்படி மேற்கொள்ளப்பட்டு மார்ச் 2009ல் நிறைவு பெற்றுள்ளது. இப்புள்ளி விவர கணக்கெடுப்பு விவரங்களின் இறுதி அறிக்கை மைய அரசிடமிருந்து எதிர்நோக்கப்படுகிறது.

இத்துடன் மருந்துப் பொருள் உற்பத்தித் தொழில் சார்ந்த முதல் புள்ளி விவர கணக்கெடுப்பு பணியும் மேற்கொள்ளப்பட்டு அதனுடைய அறிக்கை இந்திய அரசிற்கு அனுப்பப்பட்டு உள்ளது.

மேலும் 2009–10ல், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத பிரிவுகளில் 10 சதவீதம் மேல் மாதிரி கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு அதன் புள்ளி விவரங்கள் இந்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு விட்டது.

**6. தொழிற்கூட்டுறவு சங்கங்கள்**

தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்கள் மாநிலத்தின் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பதிவாளராக இருப்பதால், இம்மாநிலத்தில் உள்ள அனைத்துத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்வதற்கும் இவரே பொறுப்பாளர் ஆவார். தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் 1983 மற்றும் 1988 ஆம் ஆண்டு விதிகளில் கூறப்பட்டுள்ள அனைத்து சட்டப்படியான பணிகளையும் நிறைவேற்றும் பொறுப்பும் இவரைச் சார்ந்ததாகும்.

**பல்வேறு திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படும் சிறப்பு நடவடிக்கைகள்**

**7. தொழில் முனைவோர் பதிவேடு பகுதி I-க்கான ஒப்புகை அளித்தல்**

இணையதளம் மூலமாக தொழில் முனைவோர் பதிவறிக்கை (பகுதி 1) பதிவு செய்யும் முறை அமல்படுத்தியதன் விளைவாக எந்த ஒரு தொழில் முனைவோர் வேண்டுமானாலும் தொழில் முனைவோர் பதிவேடு பகுதி 1 ஐ இணையதளம் மூலமாகவோ அல்லது மாவட்ட தொழில் மையத்தின் மூலமாகவோ பதிவு செய்யலாம். அதற்கு மாவட்ட தொழில் மையம், தொழில் முனைவோர் நிறுவன ஒப்பந்த எண்ணை ஒதுக்கீடு செய்து ஒப்புகை வழங்கும்.

தொழில் முனைவோர் பதிவேடு பகுதி 1 ஐ பதிவு செய்வது, குறு, சிறு மற்றும் நடுத்தர, சேவை தொடர்பான தொழில் நிறுவனங்களின் விருப்பத்திற்குரியதாகும். ஆனால், உற்பத்தி சார்ந்த நடுத்தர நிறுவனங்கள் பதிவேடு பகுதி 1 ஐ பதிவு செய்வது கட்டாயமானதாகும். 2010–2011 ஆம் ஆண்டில், தொழில் முனைவோர் பதிவேடு, பகுதி 1, இணையதளம் வாயிலாக மற்றும் நேரடியாக தாக்கல் செய்த 77,819 நிறுவனங்களுக்கு ஒப்புகை எண்கள் வழங்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | பகுதி I | | |
|---|---|---|---|
| | நேரடி | இணையதளம் | மொத்தம் |
| 2008–09 | 22037 | 21395 | 43432 |
| 2009–10 | 11711 | 55177 | 66888 |
| 2010–11 | 12059 | 65760 | 77819 |

**8. தொழில் முனைவோர் பதிவேடு பகுதி 2 க்கான ஒப்புகை அளித்தல்**

ஒரு நிறுவனம் உற்பத்தியைத் தொடங்கிய பின் தொழில் முனைவோர் பதிவேடு பகுதி 2 பதிவு எண் பெறுவதற்கான தகுதியைப் பெறுகிறது. இதனைப் பெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அரசின் மானியங்கள், கொள்முதல் மற்றும் விலை முன்னுரிமை, அரசு ஒப்பந்தப்

புள்ளிக்கான பிணை வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு ஆகிய அரசின் சிறப்புச் சலுகைகளைப் பெற தகுதி பெறுகின்றன.

2010–2011 ஆம் ஆண்டில், தொழில் முனைவோர் பதிவேடு பகுதி 2 இணையதளம் வாயிலாக மற்றும் நேரடியாக தாக்கல் செய்த 57,902 நிறுவனங்களுக்கு உரிய ஒப்புகை எண்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள், 41,388 நிறுவனங்களுக்கு தொழில் முனைவோர் பதிவேடு பகுதி 2 ஒப்புகை இணையதளம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | பகுதி II | | |
|---|---|---|---|
| | நேரடி | இணையதளம் | மொத்தம் |
| 2008-09 | 22642 | 9407 | 32049 |
| 2009-10 | 10673 | 31126 | 41799 |
| 2010-11 | 16,514 | 41,388 | 57902 |

## 9. ஒற்றைச்சாளர முறை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை தொடங்க முனையும் தொழில் முனைவோர்கள் மாசுக்கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மான கழகம், தீயணைப்புத் துறை, பொதுசுகாதாரத் துறை, உள்ளாட்சி அமைப்புகள் போன்ற அரசுத் துறைகளிடமிருந்து தீர்வுகள் மற்றும் உரிமங்களை பெற வேண்டியதுள்ளது. தொழில் முனைவோர்கள் மேற்கண்ட உரிமங்கள் மற்றும் தீர்வுகளை விரைவில் பெறுவதற்கு உதவும் வகையில் ஒற்றைச் சாளர தீர்வு முறையானது இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இம்முறையின் கீழ் ஒற்றைச் சாளர தீர்வுக் குழுக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும், அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளன. தொழில் முனைவோர்கள் அனைத்து உரிமங்களையும் பெறுவதில் உதவுவதற்காக இக்குழுக்கள் மாதம் ஒரு முறை கூடி சம்பந்தப்பட்ட உரிமங்கள் வழங்கும் அதிகாரிகளை அழைத்து, திட்டங்களை தொடங்குவதில் தொழில் முனைவோர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்றன. பதினொன்றாம் திட்ட காலத்திற்கான செயல்பாடு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:–

| ஆண்டு | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | தீர்வு காணப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2008-2009 | 1286 | 1087 |
| 2009-2010 | 1188 | 1082 |
| 2010-2011 | 1146 | 1029 |

## 10. மாவட்ட ஏற்றுமதி வளர்ச்சிப் பிரிவு

மாநிலத்தில் ஏற்றுமதியை ஊக்கப்படுத்துவதற்காக அரசு மாவட்ட தொழில் மையத்தில் மாவட்ட ஏற்றுமதி வழிகாட்டி பிரிவு ஒன்றினை ஏற்படுத்தி உள்ளது. இதனையடுத்து தமிழக அரசு அரசாணை நிலை எண்.16, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை நாள் 27.2.2009இன் மூலம் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்கள் மாநிலத்தின் ஏற்றுமதி ஆணையராக செயல்படுவார் எனவும் மாவட்டத் தொழில் மையங்களில் இயங்கிவரும் ஏற்றுமதி வழிகாட்டிப் பிரிவு,

மாவட்ட ஏற்றுமதி வளர்ச்சிப் பிரிவாக செயல்படும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. தொழில் முனைவோர்களுக்கு, தற்போதைய ஏற்றுமதி நடவடிக்கைகள் மற்றும் ஏற்றுமதி சம்பந்தப்பட்ட நடைமுறைகள் பற்றிய விவரங்களை மாவட்ட ஏற்றுமதி வளர்ச்சிப் பிரிவு அளிக்கிறது. மாவட்ட ஏற்றுமதி வளர்ச்சிப் பிரிவுகள் பயனுள்ள முறையில் பணியாற்றிட இணையதளத்துடன் கூடிய கணினி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

**11. ஊக்கத்தொகைகள்**

2008-09, **2009–2010** மற்றும் **2011–12** ஆம் ஆண்டுகளில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான பல்வேறு மானியத் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு மற்றும் செலவு செய்யப்பட்ட விவரம் கீழே தரப்பட்டுள்ளது:–

(ரூபாய் இலட்சத்தில்)

| திட்டத்தின் பெயர் | 2008-09 | | 2009-10 | | 2010-11 | |
|---|---|---|---|---|---|---|
| | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப் பட்டது | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப் பட்டது | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப்பட் டது |
| 1. மூலதன மானியம் | 3000.00 | 1996.22 | 3002.03 | 3002.03 | 4500.00 | 4500.00 |
| 2. குறைந்தழுத்த மின் மானியம் | 500.00 | 268.55 | 451.00 | 386.76 | 500.00 | 500.00 |
| 3. குறு உற்பத்தி நிறுவனங்களுக்கு மதிப்பு கூட்டுவரிக்கு ஈடான மானியம் | 1000.00 | 0 | 33.69 | 33.69 | 150.00 | 149.99 |
| 4. மின்னாக்கி மானியம் | 0 | 0 | 400.00 | 375.33 | 835.02 | 835.02 |
| 5. பின்முனை வட்டி மானியம் | | | | | | |
| அ. தொழில் நுட்ப மேம்பாடு, நவீன மயமாக்கல் | 50.00 | 12.95 | 50.00 | 46.32 | 38.20 | 38.20 |
| ஆ. ஐஎஸ்ஓ சான்றிதழ் பெறுவதற்கான காலக்கடன், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் மூலம் அறிவார்ந்த கண்டுபிடிப்புகளின் காப்புரிமை பதிவுசெய்ய பெறப்படும் காலக்கடன். | 0.01 | 0 | 0.01 | 0 | 0 | 0 |
| இ. தேசிய விளிம்பு நிதி திட்டம் | 75.00 | 55.59 | 57.50 | 56.00 | 28.99 | 28.99 |
| உ. தேசிய சிறுதொழில் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் கூட்டுக்கடன் கூட்டுகாலக்கடன் திட்டம் மற்றும் கடன் உத்தரவாத நிதிகுழும திட்டத்தின் கீழ் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனத்திடம் பெறுப்படும் காலக்கடன். | 0.04 | 0.04 | 0.49 | 0.48 | 5.44 | 5.44 |
| **மொத்தம்** | **4625.05** | **2333.35** | **3994.72** | **3900.61** | **6057.65** | **6057.64** |

**12. பகுப்பாய்வு, சேவை மற்றும் உற்பத்தி வசதிகள்**

**அ. இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக் கூடங்கள்**

தொழில் வணிகத் துறையின் கீழ் இயங்கிவரும் அரசு பரிசோதனைக் கூடங்கள் மாநிலத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பரிசோதனை தேவைகளை நிறைவேற்றி வருகிறது. இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக் கூடம், கிண்டி மற்றும் மதுரை, கோவை, சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள மண்டல சோதனை ஆய்வுக் கூடங்கள் தொழிலக மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களான உலோகங்கள், உலோகக் கலவைகள், தண்ணீர், பெயிண்ட், சிமெண்ட், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் ஆர்.டி.எஸ் கம்பி முதலியவற்றின் பரிசோதனை வசதிகளை தொழிலகங்களுக்கு வழங்கி வருகிறது. இந்த ஆய்வுக்கூடங்கள் தொழில் நிறுவனங்களுக்கு குறைந்த பரிசோதனைக் கட்டணத்தில் பரிசோதனை செய்வதுடன், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு 50 சதவீதம் சலுகைக் கட்டணத்தில் பரிசோதனை சேவையினை வழங்கிவருகிறது.

சேலத்திலுள்ள மண்டல சோதனை ஆய்வுக் கூடமானது சேலம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளின் விவசாயம் சார்ந்த ஸ்டார்ச் மற்றும் சேகோ பொருட்களின் பரிசோதனைகளைச் செய்வதில் தனித்தகுதி பெற்று சிறப்புடன் விளங்குகிறது.

தூத்துக்குடியில் உள்ள மண்டல சோதனை ஆய்வுக் கூடமானது தூத்துக்குடி மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் இயங்கிவரும் உப்பு மற்றும் உப்பு சார்ந்த பொருட்களின் பரிசோதனைகளைச் செய்வதில் தனித்தகுதி பெற்று சிறப்புடன் விளங்குகிறது.

உபகரண வசதிகள் மற்றும் பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகள் மற்றும் பயனடைந்த அலகுகளின் விவரங்கள் கீழ் வருமாறு:—

| பரிசோதனை நிலையங்கள் | கருவிகள் மற்றும் உபகரணங்கள் விவரம் | பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் வகைபாடு | 2008-2009 | | 2009-2010 | | 2010-2011 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பரிசோ—தனை செய்யப்—பட்ட மாதிரி—களின் எண்ணிக்கை | பயன—டைந்த அலகு—களின் எண்ணிக்கை | பரிசோ—தனை செய்யப்—பட்ட மாதிரி—களின் எண்ணிக்கை | பயன—டைந்த அலகு—களின் எண்ணிக்கை | பரிசோ—தனை செய்யப்—பட்ட மாதிரி—களின் எண்ணிக்கை | பயன—டைந்த அலகு—களின் எண்ணிக்கை |
| இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப் பாய்வகம், சென்னை. | அட்டாமிக் அப்சார்ப்சன் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர், ஆப்டிக்கல் எமிஷன் ஸ்பெக்ட்ரோ மீட்டர், லீக்கோ கார்பன் சல்பர் சாதனம், திறன் வரைவித்தல் சாதனங்கள், யூனிவர்சல் பரிசோதனை இயந்திரம், கடினத்தன்மை பரிசோதனை இயந்திரங்கள். | அனைத்து வகை மூல மற்றும் முடிவுப் பொருட்கள், கட்டிட பொருட்கள். | 6681 | 1400 | 9433 | 1408 | 12290 | 1990 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மண்டல பரிசோதனைக் கூடம், மதுரை | உயர் செயல்பாடு கொண்ட திரவ க்ரோமோட்டோகிராப், யுனிவர்சல் பரிசோதனை இயந்திரம், கடினத்தன்மை பரிசோதனை இயந்திரம். | அனைத்து வகை மூல மற்றும் முடிவுப் பொருட்கள், கட்டிட பொருட்கள், மருந்துப் பொருட்கள் மற்றும் பூச்சுக்கொல்லிகள். | 10446 | 1978 | 14936 | 2910 | 25394 | 3328 |
| மண்டல பரிசோதனைக் கூடம், கோயம்புத்தூர். | யுனிவர்சல் பரிசோதனை இயந்திரம், கடினத்தன்மை பரிசோதனை இயந்திரம். | அனைத்து வகை மூல மற்றும் முடிவுப் பொருட்கள், கட்டிட பொருட்கள். | 11180 | 641 | 10051 | 442 | 11105 | 3645 |
| மண்டல பரிசோதனைக் கூடம், சேலம். | யுனிவர்சல் பரிசோதனை இயந்திரம், கடினத்தன்மை பரிசோதனை இயந்திரம் மற்றும் என்.ஐ.ஆர். சாதனம். | அனைத்து வகை மூல மற்றும் முடிவுப் பொருட்கள், கட்டிட பொருட்கள், சவ்வரிசி மற்றும் மாவுப் பொருட்கள் | 22952 | 1973 | 26842 | 2709 | 13623 | 3252 |
| மண்டல பரிசோதனைக் கூடம் தூத்துக்குடி | உலகத் தரம் வாய்ந்த பரிசோதனை இயந்திரம். | அனைத்து வகை மூல மற்றும் முடிவுப் பொருட்கள், கட்டிட பொருட்கள் மற்றும் உப்பு. | 6560 | 90 | 4823 | 118 | 7448 | 126 |
| | | மொத்தம் | **57819** | **6082** | **66085** | **7587** | **69860** | **12341** |

### ஆய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் இலக்கு மற்றும் முடிக்கப்பட்ட விவரங்கள்
### இரசாயனப் பிரிவு

| வ. எண். | பரிசோதனை நிலையங்கள் | 2008–2009 | | 2009–2010 | | 2010–2011 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. | 7. | 8. |
| (அ) மாதிரிகளின் சோதனை | | | | | | | |
| 1 | இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம், சென்னை | 7875 | 6681 | 7875 | 9433 | 9900 | 12290 |
| 2 | மண்டல பரிசோதனைக் கூடம், மதுரை | 12600 | 10446 | 12600 | 14936 | 15700 | 25394 |
| 3 | மண்டல பரிசோதனைக் கூடம், கோயம்புத்தூர் | 5250 | 11180 | 8000 | 10051 | 10600 | 11105 |
| 4 | மண்டல பரிசோதனைக் கூடம், சேலம் | 26250 | 22952 | 26250 | 26842 | 20000 | 13623 |
| 5 | மண்டல பரிசோதனைக் கூடம், தூத்துக்குடி | 4725 | 6560 | 4725 | 4823 | 4725 | 7448 |
| | **மொத்தம்** | **56700** | **57819** | **59450** | **66085** | **60925** | **69860** |
| (ஆ) வசூலிக்கப்பட்ட கட்டணம் (ரூ. லட்சத்தில்) | | | | | | | |
| 1 | இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம், சென்னை | 31.50 | 27.10 | 31.50 | 32.04 | 33.00 | 39.38 |
| 2 | மண்டல பரிசோதனைக் கூடம், மதுரை | 31.50 | 29.64 | 31.50 | 41.15 | 38.65 | 66.61 |
| 3 | மண்டல பரிசோதனைக் கூடம், கோயம்புத்தூர் | 13.13 | 33.32 | 24.00 | 31.49 | 26.65 | 33.21 |
| 4 | மண்டல பரிசோதனைக் கூடம், சேலம் | 32.81 | 28.00 | 32.81 | 34.31 | 28.00 | 28.20 |
| 5 | மண்டல பரிசோதனைக் கூடம், தூத்துக்குடி | 11.81 | 18.21 | 11.81 | 12.09 | 12.00 | 21.68 |
| | **மொத்தம்** | **120.75** | **136.27** | **131.62** | **151.08** | **138.30** | **189.08** |

**13. வேதியியல் தொழில் தகவல் வங்கி**

தொழில்முனைவோருக்கு இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகத்தில் இயங்கிவரும் தகவல் வங்கி வேதியியல் மற்றும் அதைச் சார்ந்த பொருட்களுக்கான திட்ட அறிக்கை மற்றும் பொருட்கள் தேர்வு செய்வதிலும் தேவையான உதவிகளை செய்து வருகிறது.

பல்வேறு வேதியியல் மற்றும் அதைச்சார்ந்த பொருட்களை தயாரிக்கும் முறை, மூலப் பொருட்கள், இயந்திர தளவாடங்கள் மற்றும் முதலீடு போன்ற விவரங்கள் திட்ட அறிக்கையில் கொடுக்கப்படுகிறது. இந்த ஆய்வுக்கூடம் புதிய தொழில்முனைவோர்களின் நிதி முதலீட்டுத் தகுதி மற்றும் விற்பனை செய்யக்கூடிய தகுதிக்கு ஏற்ப பொருட்களை தேர்வு செய்வதிலும் உதவி வருகிறது. தமிழகத்தில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் விதத்தில் திட்ட அறிக்கைகள் குறைந்த கட்டணமான ரூ.50/– க்கு விற்கப்பட்டு வருகிறது.

**14. பற்றாக்குறையுள்ள மூலப்பொருட்கள்**

இரசாயனப் பிரிவு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு டி.எல்.2 மற்றும் ஆர்.எல் உரிமம் வழங்குவதற்காக, மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையரின் வேண்டுகோளுக்கிணங்க தொழிற்சாலைகளின் உற்பத்தி திறன் மற்றும் தொழில் நுட்ப குறிப்புகளை வழங்கி இரசாயனப் பிரிவு உதவி வருகிறது. 2010–2011 ஆம் ஆண்டில், 6 தொழிலகங்களுக்கு எரிசாராயம் வழங்க மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறைக்கு பரிந்துரை செய்துள்ளது.

**15. மின் மற்றும் மின்னணு தொழில் தகவல் மையம், சென்னை**

இத்தகவல் மையம் மின்சாரம் மற்றும் மின்னணுத் தொழில்களைத் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில் முனைவோருக்கு தேவையான அடிப்படைத் தகவல்கள் வழங்குவது, வழி காட்டுதல் மற்றும் கீழ்க்கண்டவழிமுறைகளை விரிவான முறையில் அளிக்கிறது:-

1. திட்டத் தொகுப்புகள்
2. அரசின் கொள்கை மற்றும் நடைமுறை
3. தொழில் நுட்ப ஆலோசனை மற்றும் தொழில் நுட்ப மாற்றம்
4. பல்வேறு நிதி நிறுவனங்களின் நிதி உதவித்திட்டம்
5. இயந்திரம், சாதனம் மற்றும் மூலப் பொருட்கள்
6. உதவித் தொகைகள் மற்றும் ஊக்கத் தொகைகள்
7. விற்பனை வாய்ப்பு பற்றிய தகவல்
8. வாங்குவோர் மற்றும் விற்பனையாளர்கள் குறித்த தகவல்

இதற்கிடையே, தொழில் முனைவோரின் உபயோகத்திற்காக ஒரு சிறந்த தொழில் நுட்ப நூலகம் மின்சாரம், மின்னணுவியல், தகவல் தொடர்பு நுண் கருவிகள் சம்பந்தப்பட்ட 1400 புத்தகங்கள் மற்றும் 100 சஞ்சிகைகளைக் கொண்டுள்ளது.

**16. மத்திய மின் ஆய்வுக் கூடம், காக்களூர்**

நாட்டில் முன்னோடியாக உள்ள பரிசோதனைக் கூடங்களில் ஒன்றாக விளங்கும் மத்திய மின்பொருள் சோதனைக்கூடம், இந்திய தர நிர்ணய மையம் (பி.ஐ.எஸ்) மற்றும் புது தில்லியிலுள்ள சோதனைக் கூடங்களுக்கான தேசீய அங்கீகார குழுமம் (என்.ஏ.பி.எல்) ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு தரக்கட்டுப்பாடு பற்றிய ஆலோசனை வழங்கும் நிலையமாகவும் இந்த ஆய்வுக்கூடம் விளங்குகிறது.

இச்சோதனை மையம், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் 160 வகையான மின் சாதனங்களைப் பரிசோதிக்கும் சோதனை வசதிகளைப் பெற்றுள்ளது. இந்திய தர நிர்ணய மையத்தின் மூலமாக வருகின்ற மின் பொருட்களை இந்த சோதனைக் கூடம் தர பரிசோதனை செய்கிறது. மேலும் தரக்கட்டுப்பாட்டு அலுவலர் மூலமாக சந்தையில் உள்ள மின் பொருட்களை சேகரித்து அனுப்பும் பொருட்களையும் இம்மையம் சோதனை செய்வதின் மூலம் மின் பொருட்களை பயன்படுத்தும் மக்களுக்கு தரமான பொருட்களை வழங்குவதற்கு ஏதுவாகிறது. மேலும் புதிய மின் மற்றும் மின்னணு பொருட்களாகிய மினியேச்சர் சர்க்யூட் பிரேக்கர்ஸ், டி.எப்.எல் விளக்குகள் மின்னணு பல்லாஸ்ட், காம்பேக்ட் ப்ளோரோசென்ட் விளக்குகள் போன்ற பொருட்களின் தரச்சோதனை / பொருள் மேம்பாடு போன்றவற்றை, அவை சார்ந்த தரக்குறிப்பேடுகளின் குறிப்புகளுக்கிணங்க இச்சோதனைக் கூடத்தில் பரிசோதனைகள் செய்யப்படுகிறன.

**மத்திய மின் பொருள் ஆய்வுக்கூடம், காக்களூர் - செயல் திறன்**

| வ. எண் | பணி | 2007-08 | 2008-09 | 2009-10 | 2010–11 |
|---|---|---|---|---|---|
| 1 | பரிசோதனை செய்யப்பட்ட பொருட்கள் (எண்ணிக்கை) | 6485 | 7502 | 7517 | 6666 |
| 2 | பரிசோதனைக் கட்டணம் (ரூபாய் இலட்சத்தில்) | 140.94 | 150.04 | 165.14 | 186.23 |

**17. பொது வசதி மையம் , ஒசூர்**

இம்மையம் அப்பகுதியில் உள்ள உற்பத்தியாளர்களின் தேவைக்கேற்ப மின் மற்றும் மின்னணு சாதனங்களின் தரத்தை மேம்படுத்த சோதனை செய்யும் வசதியை அளிக்கிறது. மேலும் பொருட்களின் தரம் குறித்து விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்துகின்றது. 2010–11 ஆம் ஆண்டு இம்மையம் மூலம் 17 பொருட்கள் பரிசோதனை செய்யப்பட்டு ரூ.12,300/ பரிசோதனைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**பயிற்சி மையங்கள்**

**18. பீங்கான் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், விருத்தாசலம்**

விருத்தாசலத்திலுள்ள பீங்கான் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், தொழில் நுட்ப கல்வித் துறையுடன் இணைக்கப்பட்டு 1964–ஆம் ஆண்டில் இருந்து பீங்கான் தொழிலுக்கான பயிற்சியளிக்கும்

நோக்கில் செயலாற்றி வருகிறது. இப்பயிற்சி நிலையம் 3½ ஆண்டுகால பீங்கான் தொழில்நுட்பவியலில் பட்டயப்பயிற்சி வழங்கி வருகிறது. இதில், தொழிற்சாலைகளில் 6 மாதகால நேரடிப் பயிற்சியும் உள்ளடங்கும். பிற தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளிகளை ஒத்து பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் இங்கு அனுமதிக்கப்படுவர். இப்பயிற்சி நிலையத்தில் 50 மாணவர்கள் முதலாமாண்டிலும், 10 மாணவர்கள் நேரடிச் சேர்க்கையில் இரண்டாம் ஆண்டிலும், சேர்க்கப்படுகிறார்கள்.

மேலும், தரமான ஆய்வுக் கூடத்தைக் கொண்ட பீங்கான் பயிற்சி நிறுவனம் இந்த மாநிலத்தில் ஒன்று மட்டுமே உள்ளது. இப்பயிற்சி நிறுவனம் மாணவர்களுக்கு கூடுதல் செயல் முறை அறிவினை பெருக்கும் விதத்தில், பீங்கான் தொழிற்பேட்டைக்கு அருகில் அமைந்துள்ளது. இந்தப் பயிற்சி நிறுவனத்தின் மாணவர்கள் சொந்த தொழில் தொடங்குவதுடன், உள் மற்றும் வெளிநாடுகளில் முன்னணி பெரிய தொழிற்சாலைகளிலும் வேலைவாய்ப்பு பெறுகிறார்கள்.

**19. அரசினர் அறிவியல் கண்ணாடி பயிற்சி நிலையம், கிண்டி, சென்னை**

அரசினர் அறிவியல் கண்ணாடி பயிற்சி நிலையம், கிண்டி, சென்னை தொழில் வணிகத் துறையின் கீழ் 1950–ஆம் ஆண்டில் இருந்து இயங்கி வருகிறது. இப்பயிற்சி நிலையம் அறிவியல் கண்ணாடிக் கருவிகளை தயாரிப்பதில் மாணவர்களுக்கு இரண்டு ஆண்டு காலச் சான்றிதழ் பயிற்சி படிப்பை அளிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் 25 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், ஒவ்வொரு பயிற்சி மாணவருக்கும் ரூ.120 மாதாந்திர உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதுவரை 58 தொகுதி மாணவர்கள் பயிற்சியினை வெற்றிகரமாக முடித்துள்ளனர். 59 மற்றும் 60 வது தொகுதி (Batch) மாணவர்கள் தற்போது பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்றனர். பயிற்சி முடிவுற்ற பின், மாணவர்கள் அறிவியல் கண்ணாடிக் கருவிகள் தயாரிக்கும் தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெறுவர். மேலும், சிலர் சொந்தமாகவும் தொழில்களை தொடங்கியுள்ளனர்.

இத்துறை கோயம்புத்தூரில் அறிவியல் கண்ணாடிக் கருவிகள் தயாரிக்கும் மையம் ஒன்றையும் நடத்தி வருகிறது. இந்நிறுவனம் அறிவியல் கண்ணாடிக் கருவிகளை உற்பத்தி செய்து, தடய அறிவியல் துறைக்கு வழங்கி வருகிறது.

**20. அரசினர் தொழில் நுட்ப பயிற்சி நிலையம், கிண்டி.**

இப்பயிற்சி நிலையம் மூன்றாண்டு இயந்திரவியல் பட்டயப் படிப்பினைக் கீழ்க்காணும் சிறப்பு பிரிவுகளுடன் வழங்குகிறது:–

1. கருவி மற்றும் அச்சுப் பொறியியல்
2. குளிர் பதனம் மற்றும் காற்றுப்பதனம்

இவ்விரு பிரிவுகளிலும், முறையே 30 மற்றும் 40 மாணவர்கள் ஆண்டுதோறும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இது தவிர, கருவி மற்றும் அச்சுப் பொறித் துறையில் 1 வருட முதுநிலைப்

பட்டயப் (மேம்படுத்தப்பட்டது) படிப்பும் வழங்கப்படுகிறது. இதில் ஆண்டு தோறும் 10 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

**21. கருவிப் பொறியியல் பயிலகம், திண்டுக்கல்**

திண்டுக்கல்லில் உள்ள கருவிப் பொறியியல் பயிலகம், பூட்டுத் தொழிலாளர்களுக்கும் கைவினைக் கலைஞர்களுக்கும் கருவிகள் மற்றும் அச்சுகள் தயாரித்தலில் சிறப்பு வகைப் பயிற்சி அளிக்கும் நோக்கத்துடன் 1962 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இப்பயிலகத்தில் கருவி மற்றும் அச்சு பொறியியல் சிறப்பு பாடப்பிரிவுடன் கூடிய மூன்றாண்டு பட்டயப் படிப்பு கற்பிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் இதில் 30 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றன. சென்னையில் உள்ள மாநில தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி வாரியம் இப்படிப்புக்கான சான்றிதழ்களை வழங்குகிறது.

**22. ராஜீவ் காந்தி தொழில்முனைவோர் நட்புத் திட்டம்**

இத்துறை, மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சகத்தின் "ராஜீவ் காந்தி உத்யாமி மித்ரா யோஜனா" என்னும் தொழில் முனைவோர் நட்புத் திட்டத்தின் மூலம், முதல்தலைமுறை தொழில் முனைவோர்களுக்கு கைகொடுத்து உதவும் வகையில் புதிதாகத் தொழில் துவங்கி நடத்தத் தேவையான உதவிகளை அளிக்கிறது.

**23. தரக்கட்டுப்பாடு ஆணைகளின் அமலாக்க மையம், சென்னை.**

இந்த இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் வீட்டுஉபயோக மின்சாதனங்களின் தரக்கட்டுப்பாடு ஆணைகளைச் செயல்படுத்தும் மையம் "1981 ஆம் ஆண்டு தரக்கட்டுபாட்டு ஆணை" மற்றும் "மின்கம்பிகள், வடங்கள், வீட்டு உபயோக மின்சாதனங்கள் மற்றும் பாதுகாப்புக் கருவிகள் மற்றும் துணைக் கருவிகள் தரக்கட்டுப்பாடு ஆணை 2003" ஆகியவற்றை அமல்படுத்துகிறது. மேற்கூறிய முதல் ஆணைக்கு எதிராகச் செயல்படுவது அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955 இன்படி தண்டனைக்குரியதாகும். இரண்டாவது ஆணை, மூலம் ஐ.எஸ்.ஐ முத்திரையில்லாத சில மின் பொருட்களை தயாரிப்பதையும், விற்பனைக்குச் சேமிப்பதையும் அல்லது விநியோகிப்பதையும் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த ஆணைக்கு எதிராகச் செயல்படுவது இந்திய தர நிர்ணய குழுமச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரியதாகும். இந்த ஆணையினை அமல்படுத்த "உரிய அலுவலர்" ஆக மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மைய பொது மேலாளரும், சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை துணை இயக்குநர் (மின் மற்றும் மின்னணு), தரக்கட்டுப்பாடு மையம், சென்னை அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். 2010–11 ஆம் ஆண்டில் 2047 மின்பொருள் விநியோகஸ்தர் மற்றும் விற்பனைக் கூடங்களில் ஆய்வு நடத்தப்பட்டு, விதி மீறல்களுக்காக 66 நேர்வுகளில் பறிமுதல்கள் செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் குற்றவியல் வழங்குகள் தொடரப்பட்டுள்ளன. 2010–11ஆம் ஆண்டில் இம்மையம் மூலம் 9 நிரந்தர உற்பத்தியாளர்களும், 18 தற்காலிக உற்பத்தியாளர்களும் பதிவு சான்றிதழ்கள் பெற்றுள்ளனர். மேலும், 2578 பொருட்கள் பரிசோதனைக்காக பெறப்பட்டுள்ளன.

**தொழில் வணிக ஆணையரகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அரசு தொழிற் பேட்டைகள்**

**24. அரசினர் பீங்கான் தொழிற்பேட்டை, விருத்தாச்சலம்**

விருத்தாச்சலம் அரசினர் பீங்கான் தொழிற்பேட்டை கடந்த **1964–**அம் ஆண்டு பீங்கான் பொருட்கள் தயாரிக்கும் தொழில்களுக்குமட்டும் உருவாக்கப்பட்டது. இந்த தொழிற்பேட்டையில் **64** தொழிற் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தொழில் முனைவோருக்கு சதுர அடிக்கு மாதம் ரூ.**1.75** என்ற மிகக்குறைந்த வாடகையின் அடிப்படையில் விடப்பட்டுள்ளது. இத்தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்கூடங்கள், கழிவறைப் பொருட்கள், குறைந்த அழுத்த இன்சுலேட்டர்கள், பீங்கான் பொம்மைகள், உயர் வெப்பம் தாங்கிகள் மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பீங்கான் பொருட்களையும் தயாரித்து வருகின்றன. இத்தொழிற்பேட்டை இப்பகுதியிலுள்ள கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுகிறது. இந்த தொழிற்பேட்டையில் ரூ.**35.82** இலட்சம் என்ற இலக்குக்கு எதிராக, ரூ.**23.70** இலட்சம் (நிலுவை வாடகை வசூல் உட்பட) வாடகை வசூல் செய்யப்பட்டுள்ளது.

**25. தொழில் வணிக ஆணையரகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மின் மற்றும் மின்னணு தொழிற் பேட்டைகள்**

தொழில் வணிகத் துறையின் மின் மற்றும் மின்னணு பிரிவின் கீழ் மின் மற்றும் மின்னணு மற்றும் அவை சார்ந்த தொழில்களுக்கென்றே மேம்படுத்தப்பட்ட மனை / தொழில் கூடங்களை வாடகை / தவணை கொள்முதல் அடிப்படையில் வழங்கிட மாநிலத்தில் **8** சிறப்பு தொழிற் பேட்டைகளை அமைத்துள்ளது. அவை சென்னையில் திருவான்மியூர் மற்றும் பெருங்குடி, திருவள்ளூர் மாவட்டம் காக்களூர், கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம் துவாக்குடி, கோயம்புத்தூர் மாவட்டம் காலப்பட்டி, மதுரை மாவட்டம் கப்பலூர் மற்றும் சேலம் மாவட்டம் சூரமங்கலம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

தொழிற்பேட்டைகளில் ஒதுக்கப்பட்ட தொழிற் கூடங்கள் / மனைகளின் விவரம்

| வ. எண் | தொழிற்பேட்டை | மொத்தம் | | ஒதுக்கப்பட்டவை | | காலியாக உள்ளவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | தொழிற் கூடங்கள் | மேம்படுத்தப்–பட்ட மனைகள் | தொழிற் கூடங்கள் | மேம்படுத்தப் பட்ட மனைகள் | தொழிற் கூடங்கள் | மேம்படுத் தப்பட்ட மனைகள் |
| 1 | டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணு தொழிற் பேட்டை, திருவான்மியூர் சென்னை. | 105 | 6 | 104 | 6 | 1 | - |
| 2 | செப்பனிட்ட மனை தொழிற் பேட்டை, பெருங்குடி | – | 178 | - | 178 | - | - |
| 3 | மின் சாதன தொழிற் பேட்டை, காக்களூர் | 14 | 46 | 11 | 42 | 3 | 4 |
| 4 | மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டை, ஒசூர் | 13 | 33 | 13 | 33 | - | - |
| 5 | மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டை, கோயம்புத்தூர் | - | 30 | - | 30 | - | - |
| 6 | மின் மற்றும் மின்னணு | - | 104 | - | 30+70** | - | 1 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தொழிற்பேட்டை, மதுரை | | | | +3*** | | |
| 7 | மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டை, திருச்சிராப்பள்ளி | 8 | 68 | 8 | 68 | - | - |
| 8 | மின் மற்றும் மின்னணு தொழிற்பேட்டை, சேலம் | - | 52 | - | 49 | - | 3 |
| | **மொத்தம்** | **140** | **517** | **136** | **509** | **4** | **8** |

**70 மனைகள் சிட்கோ நிறுவனத்திற்கு மகளிர் தொழிற்பேட்டை அமைக்கும் பொருட்டு அரசாணை எண். 26 சிறு தொழில் (இ.4) துறை நாள் 31.3.2004 ன்படி மாற்றி வழங்கப்பட்டது.
***துறை உபயோகம்

**26. பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)**

இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகம், ஏற்கனவே நடைமுறையிலிருந்த பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டம் (PMRY) மற்றும் கிராம வேலை வாய்ப்பு பெருக்குத் திட்டம் (REGP) ஆகிய இரு திட்டங்களை இணைத்து, முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் சிறு தொழில் நிறுவனங்களை துவங்க, கடந்த 15.8.2008 அன்று (நாட்டின் 61 ஆவது சுதந்திர தினத்தன்று) பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) என்ற மானியத்துடன் இணைந்த புதிய கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கும், கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையத்தினால், தேசிய அளவில் ஒற்றை முகமையாக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மாநில அளவில், இத்திட்டமானது மாநில கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையம், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம் மற்றும் மாவட்ட தொழில் மையங்கள் மூலம் வங்கிகள் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கான வழிகாட்டுதல்களை இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகம், வெளியிட்டுள்ளது. தமிழகத்திற்கான 2009–10 மற்றும் 2010–11க்கான பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் இலக்கக் குறியீடு, நிதி ஒதுக்கீடு மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்க நேர்வுகள் கீழ்கண்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளன.

**2009–10 ஆம் ஆண்டிற்கான செயல்பாட்டு அறிக்கை**

| **செயல்படுத்தும் முகமை** | **இலக்கு** | | | **விளிம்பு தொகை மானியம் பட்டுவாடா செய்யப்பட்டவை** | | |
|---|---|---|---|---|---|---|
| | **எண் ணிக்கை** | **விளிம்பு தொகை (ரூபாய் இலட்சத்தில்)** | **வேலை வாய்ப்பு** | **எண் ணிக்கை** | **விளிம்பு தொகை (ரூபாய் இலட்சத்தில்)** | **வேலை வாய்ப்பு** |
| தொழில் வணிகத் துறை | 2890 | 2060.96 | 28900 | 1524 | 2335.59 | 19455 |
| காதி மற்றும் கிராமத் தொழில் | 2456 | 1807.12 | 24560 | 719 | 2137.34 | 17804 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆணையம் | | | | | | |
| தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 1575 | 1123.43 | 15750 | 899 | 1204.36 | 10032 |
| **மொத்தம்** | **6921** | **4991.51** | **69210** | **3142** | **5677.29** | **47291** |

**2010–11 ஆம் ஆண்டிற்கான செயல்பாட்டு அறிக்கை**

| செயல்படுத்தும் முகமை | இலக்கு | | | சாதனை | | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | விளிம்பு தொகை (ரூ.இலட்சத் தில்) | வேலை வாய்ப்பு | எண்ணிக்கை | விளிம்பு தொகை (ரூ.இலட்சத் தில்) | வேலை வாய்ப்பு |
| தொழில் வணிகத் துறை | 1299 | 1819.13 | 12990 | 1063 | 1818.39 | 13147 |
| காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையம் | 1110 | 1553.96 | 11100 | 581 | 1638.77 | 11375 |
| தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 726 | 1016.94 | 7260 | 603 | 1019.83 | 7373 |
| **மொத்தம்** | **3135** | **4390.03** | **31350** | **2247** | **4476.99** | **31895** |

இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த மாநில கதர் மற்றும் கிராம தொழில்கள் ஆணையத்தின் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகள் அனைத்தும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**27. வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)**

தமிழக அரசின் வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் 2010–11 ஆம் ஆண்டு முதல் செயலாக்கத்தில் உள்ளது. 2010–11 ஆம் ஆண்டில், ரூ.1.25 கோடி மானியம், பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**28. குழும மேம்பாட்டுத் திட்டங்கள்**

**அ. தொழில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்**

தொழில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2003 ஆம் ஆண்டு மத்திய அரசின் திட்டமாக புதியதாக தொடங்கப்பட்டு, பொது மற்றும் கூட்டாண்மை முறையில் அமைக்கப்படும் குழுமங்களின் தரமான அடிப்படைக் கட்டமைப்பை அமைப்பதற்காக செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் மத்திய அரசின் பங்காக குழுமம் ஒன்றிற்கு திட்ட மதிப்பில் 75 விழுக்காடு வரை அதிகபட்சமாக 60 கோடி வரை உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மீதமுள்ள 25 விழுக்காட்டில்

திட்ட மதிப்பில் 15 விழுக்காட்டிற்குக் குறையாமல் பயனாளி தொழிலகங்களின் பங்களிப்பாகவும் இருக்கும்.

10வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட 5 குழுமங்கள் செயல்படுத்தப்பட்டு உள்ளன:–

| வ. எண். | குழுமத்தின் பெயர் | அலகு களின் எண் ணிக்கை | விற்று முதல் | நபர் களின் எண்ணிக் கை | திட்ட மதிப்பு | மத்திய அரசு நிதி உதவி | சிறப்பு நோக்கு ஊர்தி மற்றும் வங்கி | மாநில அரசின் நிதி உதவி | செலவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | திருப்பூர் பின்னலாடை குழுமம், திருப்பூர் | 600 | 10000 | 20000 | 150.00 | 50.00 | 100 | –– | 156.19 |
| 2 | தானியம், பயறு, பருப்பு மற்றும் இழைகள் அரைத்தல் குழுமம், மதுரை | 770 | 1500 | 40000 | 39.96 | 29.97 | 9.99 | –– | 32.72 |
| 3 | வாகன உதிரி பாகங்கள் குழுமம், சென்னை | 250 | 1900 | 48000 | 47.49 | 27.74 | 18.36 | 1.39 | 43.15 |
| 4 | தோல் தொழில் குழுமம், ஆம்பூர் | 350 | 2000 | 45000 | 67.34 | 43.93 | 23.41 | –– | 84.36 |
| 5 | பம்ப் மோட்டார் மற்றும் பவுண்டரி குழுமம், கோயமுத்தூர் | 1200 | 1220 | 6000 | 55.30 | 39.39 | 14.70 | 1.21 | 38.63 |
| | **மொத்தம்** | **3170** | **16620** | **159000** | **360.09** | **191.03** | **166.46** | **2.60** | **355.05** |

11–வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட குழுமம் கொள்கை அளவில் ஒப்பளிப்பு செயல்படுத்தப்பட்டு உள்ளது:–

| வ. எண். | குழுமத்தின் பெயர் | அலகு களின் எண்ணி க்கை | மொத்த விற்பனை | நபர்களின் எண்ணி க்கை | திட்ட மதிப்பு | மத்திய அரசு நிதி உதவி | சிறப்பு நோக்கு ஊர்தி மற்றும் வங்கி |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பொறியியல் கட்டுமான குழுமம், திருச்சி | 1000 | 6500 | 4500 | 102.81 | 58.28 | 44.53 |

**ஆ. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் குழும மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டம் இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் அமைச்சகம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு குழுமம் ஒன்றிற்கு ரூ.15

கோடிக்கு மிகாமல் உள்ள திட்டமதிப்பீட்டில் 70 விழுக்காடு வரையும் மாநில அரசு திட்ட மதிப்பீட்டில் 10 விழுக்காடு வரையிலும் மானிய உதவியாக வழங்குகின்றன.

15 குழுமத் திட்டங்களுக்கு மைய அரசின் ஒப்புதல் ஏற்கனவே பெறப்பட்டு ரூ.5738.95 இலட்சம் மதிப்பிலான திட்டங்கள் தற்போது செயல்பாட்டில் உள்ளன. மேலும் ரூ.3663.17 இலட்சம் திட்ட மதிப்பிலான 9 பிரேரணைகளுக்கு மாநில அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் பெறப்பட்டு மைய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. பதினோராம் ஐந்தாண்டு கால திட்டத்தில் மத்திய அரசிடமிருந்து அதிக எண்ணிக்கையிலான பொது வசதி மையம் அமைக்கும் பிரேரணைகளுக்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**மைய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்ட 15 குழும திட்டங்களின் விவரம்**

| வ. எண். | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பு (ரூ.இலட்சத்தில்) | நிறுவனங்களின் எண்ணிக்கை | இலக்கு (ரூ. கோடியில்) | வேலை வாய்ப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | மாவு அரைக்கும் இயந்திர குழுமம், கோவை | 288.20 | 700 | 300.00 | 20000 |
| 2. | தீப்பெட்டி குழுமம், குடியாத்தம் | 156.00 | 525 | 52.50 | 1000 |
| 3. | தீப்பெட்டி குழுமம், விருதுநகர் | 156.00 | 825 | 82.50 | 1500 |
| 4. | தீப்பெட்டி குழுமம், சாத்தூர் | 156.00 | 1225 | 122.50 | |
| 5. | தீப்பெட்டி குழுமம், ஸ்ரீவில்லிபுத்தூர் | 156.00 | 525 | 52.50 | 750 |
| 6. | தீப்பெட்டி குழுமம், கழுகுமலை | 156.00 | 525 | 52.50 | 1225 |
| 7. | தீப்பெட்டி குழுமம், கோவில்பட்டி | 156.00 | 1025 | 102.50 | 1100 |
| 8. | சேகோசர்வ் குழுமம், சேலம் | 150.00 | 550 | 230.29 | 25000 |
| 9. | செங்கல் குழுமம், திருநெல்வேலி | 227.28 | 50 | 34.50 | 150 |
| 10. | பீங்கான் குழுமம் விருதாச்சலம் | 73.10 | 300 | 48.00 | 1200 |
| 11. | கயிறு குழுமம், சிவகங்கை | 658.90 | 7219 | 39.66 | 7500 |
| 12. | பொறியியல் குழுமம், இராணிப்பேட்டை | 927.08 | 200 | 120.00 | 26000 |
| 13. | அச்சு குழுமம், சிவகாசி | 1096.87 | 600 | 1000.00 | 12000 |
| 14. | அரிசி ஆலை குழுமம், கீழப்பாவூர் | 690.58 | 163 | 1575.00 | 3720 |
| 15. | பொறியியல் குழுமம், ஓசூர். | 690.94 | 1500 | 450.00 | 18000 |
| **மொத்தம்** | | **5738.95** | **15932** | **4262.45** | **119145** |

மேலும், 2011–12 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் 9 குழுமங்கள் செயல்படுத்தப்பட உள்ளன:-

| வ. எண். | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பு (ரூ.இலட்சத்தில்) | நிறுவனங்களின் எண்ணிக்கை | இலக்கு (ரூ. கோடியில்) | வேலை வாய்ப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | அரிசி ஆலை குழுமம், ஆலங்குளம். | 789.15 | 75 | 75.00 | 1000 |
| 2. | பிளாஸ்டிக் குழுமம், மதுரை | 524.42 | 800 | 100.00 | 8500 |
| 3. | மருந்து பொருட்கள் (MICAL) குழுமம், சென்னை. | 342.64 | 350 | 2000.00 | 81000 |
| 4. | பொறியியல் குழுமம், அம்பத்தூர். | 551.36 | 620 | 550.00 | 4500 |
| 5. | பொறியியல் குழுமம், திண்டுக்கல். | 971.29 | 210 | 75.00 | 4000 |
| 6. | பொறியியல் குழுமம், பெருங்குடி. | 77.00 | 2000 | 12.00 | 40000 |
| 7. | பொறியியல் குழுமம், பரமக்குடி | 233.39 | 47 | 45.78 | 765 |
| 8. | எவர் சில்வர் குழுமம், கும்பகோணம். | 126.52 | 114 | 19.44 | 400 |
| 9. | மருந்து (சித்தா–மூலிகை பவுடர்) குழுமம், காவாங்கரை, திருவள்ளூர். | 47.40 | 120 | 42.00 | 1300 |
| | **மொத்தம்** | **3663.17** | **4336** | **2919.22** | **141465** |

**29. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

குடிசை மற்றும் கிராம தொழில்களுக்கு மட்டுமின்றி, ஊரக பகுதியில் வாழும் மக்களுக்கும் குறிப்பாக பெண்களுக்கு, கைவினைஞர்களுக்கு, சிறு தொழில் முனைவோர்களுக்கு பயனுள்ள வேலைவாய்ப்பினை வழங்குவதற்காக தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும், சிறு தேயிலை விவசாயிகள் மற்றும் மரவள்ளிகிழங்கு பயிரிடும் விவசாயிகள் ஆகியோர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் வகையிலும் சிறப்பாக சேவை செய்து வருகின்றன. தவிர, கூட்டுறவு தொழிற்பேட்டைகளின் மூலமாக குறு மற்றும் சிறு தொழில் முனைவோர்களுக்கு தொழிற் கூடங்களும், மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளும், அவர்கள் தொழில் துவங்கி நடத்துவதற்கான அனைத்து அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளையும் அமைத்து கொடுக்கின்றன. இவ்வாறு தேயிலை, சவ்வரிசி, தீப்பெட்டி, கயிறு, பாலிதீன், கைவினை பொருட்கள், தையல், ஆட்டோ சேவை, உலோகம், அச்சகம்,

ஒப்பந்த தொழிலாளர் சேவை, கூட்டுறவு தொழிற் பேட்டைகள் போன்ற பிரிவுகளிலும், இருளர் பாம்பு பிடிப்போர், பொருள் போக்குவரத்து, பனியன், குடை தயாரிப்பு போன்ற சிறப்பு பிரிவுகளிலும் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத்துறை இயக்குநர் அவர்கள் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ஆவர். **31.3.2011**ன்படி மொத்தம் **353** சங்கங்கள் உள்ளன. அதில் **278** சங்கங்கள் இலாபத்தில் இயங்கிவருகின்றன. தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மொத்த விற்பனை தொகையாக ரூ.**660.87** கோடியும், நிகர இலாபத்தொகையாக ரூ.**12.28** கோடியும் அடைந்துள்ளன.

**30. தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள்**

தனியார் தேயிலை தொழிற்சாலைகளின் சுரண்டல்கள் மற்றும் பல்வேறு இன்னல்களிலிருந்து, சிறுதேயிலை விவசாயிகளை விடுவித்து, அவர்களுக்கு பாதுகாப்பும் அவர்களது பசுந்தேயிலைக்கு தகுந்த விலையை பெற்றுத் தரவும் நீலகிரி மாவட்டத்தில் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. இது போன்ற தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் தொடங்குவதற்குமுன், இச்சிறு தேயிலை விவசாயிகள் தங்களது பசுந்தேயிலைக்கு தகுந்த விலை கிடைக்காமலும், அதிக அளவு பசுந்தேயிலை நிராகரிக்கப்படும் நிலையிலும், கொள்முதலில் நடைபெற்ற குளறுபடிகளாலும், தனியார் தேயிலை தொழிற்சாலைகளால் துயருந்தனர். இத்துயரத்திலிருந்து சிறு தேயிலை விவசாயிகளை காக்கும் பொருட்டு, அரசே தேயிலை தொழிற்சாலைகள் அமைக்க வேண்டிய தேவை இன்றியமையாததாகிவிட்டது. தற்போது தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளால் இச்சிறு தேயிலை விவசாயிகள் தங்களது பசுந்தேயிலைக்கு நியாயமான விலை பெற்று வருகின்றனர். இத்தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள், தமது உறுப்பினர்களுக்கு தேவைப்படும் உரங்கள், எரு போன்ற இடுபொருட்கள், தேயிலைக் கன்றுகள், பசுந்தேயிலை பறிக்க தேவைப்படும் பைகள் ஆகியவற்றையும் வழங்குகின்றன.

தற்சமயம் நீலகிரி மாவட்டத்தில் **15** தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள், ஆண்டொன்றுக்கு **181** இலட்சம் கிலோ தேயிலைத்தூள் தயாரிக்கும் திறனுடன் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டின் மொத்த தேயிலைத்தூள் உற்பத்தியில் **17** விழுக்காடு தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளின் உற்பத்தி பங்காகும். **15** தொழிற் கூட்டுறவு தொழிற்சாலைகள் **2010–2011**ஆம் ஆண்டில், **165.85**இலட்சம் கிலோ தேயிலைத் தூள் உற்பத்தி செய்து, ரூ.**82.71** கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளன. மேலும், இதே ஆண்டில் அனைத்து தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளும் இலாபத்தில் இயங்கினாலும், **9** தொழிற்சாலைகள் குறைந்த நட்டத்தில் இயங்கியுள்ளன.

**31. இன்ட்கோசர்வ்**

தொழிற் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள் நிறுவப்பட்டவுடன், தொழிற்சாலைகளின் செயல்பாட்டினை ஒருங்கிணைக்கவும், தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு சந்தை

வாய்ப்பினை ஏற்படுத்தவும், ஒரு இணையத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டு, தமிழ்நாடு தேயிலை சிறு விவசாயிகள் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் இணையம் (இன்கோசர்வ்) 1965–இல் ஏற்படுத்தப்பட்டது. மேலும் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் இயந்திர உதிரி பாகங்கள், தேயிலைத்தூள் நிரப்பும் பைகள், உரங்கள் போன்றவற்றை ஒருங்கிணைந்த கொள்முதல் மூலம் பெற்று வழங்குகிறது. மாநிலப் பொது விநியோகத்திட்டத்தின்கீழ் "ஊட்டி" டீ என்ற பெயரில் தேயிலை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நீலகிரியில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைத் தூளை பெருமளவில் கொள்முதல் செய்து, சந்தை இடையீடு செய்வதன் மூலம், சந்தையில் பொது மக்களுக்கு நியாயமான விலையில் தேயிலைத்தூள் கிடைத்திட செய்யவும், இன்ட்கோசர்வ் வழிவகை செய்து வருகிறது. 2010–2011ம் ஆண்டில் இன்ட்கோசர்வ் நிறுவனம் ரூ.28.58 கோடிக்கு விற்பனை செய்து, ரூ.53.81 இலட்சம் நிகர இலாபம் அடைந்துள்ளது.

**32. தேயிலை உற்பத்தியாளர் சேவை கூட்டுறவு சங்கம் (Teaserve)**

வழக்கமான ஏல விற்பனை நடைமுறையிலுள்ள, மறைமுகத்தன்மையைப் போக்கி அதிலுள்ள குறைபாடுகளை களையவும், தேயிலைத்தூளுக்கு உரிய விற்பனை விலை கிடைக்க செய்யவும் தேயிலை உற்பத்தியாளர் சேவை கூட்டுறவு சங்கம் (டீசர்வ்) என்ற பெயரில் நாட்டினிலே முதன்முறையாக தேயிலை ஏலத்திற்கென்று மின்னணு ஏல மையம் ஒன்று குன்னூரில் கூட்டுறவு சங்கமாக 28.08.2002ல் பதியப்பட்டு 01.10.2003 முதல் இயங்கி வருகிறது. இந்த ஏல மையத்தில், அனைத்து தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளும், தனியார் தேயிலைத் தொழிற்சாலைகளும், டான்டீ நிறுவனத்தின்கீழ் அமைந்துள்ள தேயிலை தொழிற்சாலைகளும் உறுப்பினர்களாவர். தேயிலை தூளுக்கு நல்ல விலையும் விற்பனை மற்றும் கொள்முதலில் வெளிப்படைத் தன்மையையும், விற்பனை முறையில் இடைத்தரகர்களை முற்றாக நீக்குவதும், இந்நிறுவனத்தின் நோக்கமாகும். இந்நிறுவனம் 2010–2011ல் 182.41 இலட்சம் கிலோ தேயிலைத்தூள் அதாவது ரூ.104.71 கோடி மதிப்பிற்கு தேயிலைத்தூள் விற்பனை செய்து, ரூ.7.20 இலட்சம் நிகர இலாபம் அடைந்துள்ளது.

**33. சேகோசர்வ்**

மரவள்ளிக்கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்களை, இடைத்தரகர்களின் தன்னலப் பயன்பாடு, சுய இலாபம் மற்றும் சுரண்டல் ஆகியவற்றிலிருந்து விடுவிப்பதுடன், அவர்களுடைய உற்பத்திப் பொருட்களுக்கு ஆதாயகரமான விலை கிடைப்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் "சேகோசர்வ்" என அனைவராலும் சுருக்கமாக அழைக்கப்படும் சேலம் கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் 21.07.81 அன்று பதிவு செய்யப்பட்டது. இச்சங்கத்தில் 364 உறுப்பினர்கள் உள்ளனர். சங்கத்தின் மொத்த பங்கு மூலதனம் ரூ.722.68 இலட்சமாகும். இதில் அரசின் பங்கு ரூ. 99.83 இலட்சமாகும். சேமிப்பு கிட்டங்கிகள் சேவையையும், உறுப்பினர்களது உற்பத்தி பொருட்களுக்கான சந்தை வாய்ப்பினையும் ஏற்படுத்தி தருவதுடன், தேவையான கடன் வசதியினையும் இச்சங்கம் அளித்து வருகிறது. மேலும் மைய அரசின் குறு, சிறு நிறுவனங்களின் குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.150 இலட்சம் செலவில், தரக்கட்டுபாட்டை

ஆய்வு செய்யும் ஆய்வுக் கூடம் ஒன்று நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இச்சங்கம் 2010–2011ல் ரூ.371.41 கோடிக்கு விற்பனையை செய்து, ரூ.236.72 இலட்சம் நிகர இலாபம் அடைந்துள்ளது.

**34. தாய்கோ வங்கி**

தாய்கோ வங்கி என அனைவராலும் சுருக்கமாக அழைக்கப்படும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கியானது 1961ம் ஆண்டு தொடங்கப்பட்டது. தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான நிதியுதவி அளிப்பதை முதன்மை நோக்கமாக கொண்டு தொடங்கப்பட்டதாகும். காலப்போக்கில் மற்ற வங்கிகளை போல, பொதுமக்களுக்கான சேவைகளையும் தொடங்கி சிறப்பாக செய்து வருகிறது. இவ்வங்கி புதிதாக குறு மற்றும் சிறு தொழில்கள் தொடங்குவதற்கும், அவற்றிற்கான நடைமுறை மூலதனத்திற்கும், நிதியுதவி வழங்குகிறது. மேலும், பொது மக்களுக்கு தனிநபர் கடன், நகைக்கடன், வீடு அடமானக்கடன் போன்றவற்றையும் அளித்து வருகின்றது. பொது மக்களுக்கு வங்கியில் சேமிப்புக் கணக்கு, நடப்புக் கணக்கு போன்ற பலவிதமான வங்கி கணக்கு வசதிகளைகளையும் வழங்கி வருகிறது. தவிர, இவ்வங்கி தாட்கோ, தாம்கோ, டாப்செட்கோ நிறுவனங்கள் செயல்படுத்தும் திட்டங்களுக்கு திட்ட செயலாக்க நிறுவனமாகவும் செயல்படுகிறது. இவ்வங்கி ரூ.688.72 கோடி அளவிற்கு வைப்புத் தொகையை கையாண்டு ரூ.499.51 கோடி அளவிற்கு கடன் வசதி அளித்துள்ளது. இவ்வங்கி 44 கிளைகளை கொண்டு ரூ.248.80 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

**35. தமிழ்நாடு மாநில கயிறு கூட்டுறவு விற்பனை இணையம் (Tancofed)**

தமிழ்நாட்டில் இயங்கிவரும் கயிறு கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான மூலப்பொருட்களை வழங்குவதற்கும், அவை உற்பத்தி செய்யும் பொருட்களை சந்தையில் விற்பனை செய்திட உதவுவதற்கும் மாநில தலைமை இணையமாக, தமிழ்நாடு மாநில கூட்டுறவு கயிறு விற்பனை இணையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவ்விணையம் தனது உறுப்பினர் சங்கங்கள் உற்பத்தி செய்யும் இருபிரிக் கயிறு, முப்பிரிக் கயிறு, கயிறு மிதியடி மற்றும் தரை விரிப்புகள், தாம்பு கயிறு, கயிறு வடம், இரப்பர் பாலுடன் இணைக்கப்பெற்ற கயிறு மெத்தைகள், தலையணைகள், இரப்பர் பாலுடன் இணைந்த முடிவுறா கயிறு மெத்தை அடுக்குகள் ஆகியவற்றை கொள்முதல் செய்து, வணிகர்களுக்கும் அரசு துறைகளுக்கும் அரசு சார்பு நிறுவனங்களுக்கும் விற்பனை செய்து வருகின்றது. 2010–2011ல் இச்சங்கமானது ரூ.160.44 இலட்சத்திற்கு விற்பனை அளவை எய்தி ரூ.2.86 இலட்சம் இலாபம் அடைந்து, தனது குவிந்த நட்டத்தை ரூ.55.42 இலட்சத்திற்கு குறைத்துள்ளது.

**36. கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள்**

இந்தியாவில் அதிக அளவில் தென்னை நார் உற்பத்தி செய்வதில் கேரள மாநிலத்திற்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தில் தமிழகம் இருந்தாலும், பழுப்பு நாரினை உற்பத்தி செய்வதில் முதல் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. கயிறு தொழிலானது, தமிழகத்தில் பெண்களுக்கு வேலைவாய்ப்பினை

வழங்குவதில் சிறந்ததொரு சேவை புரிகின்றது. கூட்டுறவு பிரிவின்கீழ் 74 கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவைகள் மூலம் 10372 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். இச்சங்கங்களின் மொத்த பங்கு முதல் ரூ.266.85 இலட்சம் ஆகும். இதில் ரூ.222.22 இலட்சம் அரசின் பங்காகும். 2010–2011ல் இக்கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ரூ.1341.28 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை அளவை எய்தி, ரூ.118.12 இலட்சம் கூலியாக தொழிலாளர்களுக்கு வழங்கியுள்ளன.

கயிறு வாரிய உதவியுடன் பாரம்பரிய தொழில்கள் புத்துயிர் ஊட்ட நிதி வழங்கும் (ஸ்புருட்டி) திட்டத்தின்கீழ் கடலூர், சேலம், சிங்கம்புனரி, பெரியகுளம், பட்டுக்கோட்டை மற்றும் குடியாத்தம் ஆகிய ஆறு இடங்களில் ரூ.528.65 இலட்சம் மொத்த மதிப்பீட்டில் கயிறு குழுமங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

இதே போன்று, மத்திய அரசானது சிவகங்கை மாவட்டத்தில் சிங்கம்புனரியில் ரூ.658.90 இலட்சத்தில் கயிறு குழுமம் அமைக்க குறு, சிறு நிறுவனங்கள் குழும மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் ரூ.500 இலட்சம் மத்திய அரசின் மானியமும், ரூ.65.89 இலட்சம் தமிழக அரசின் பங்காகவும் வழங்கப்படவுள்ளது. இக்குழுமத்தின் ஆரம்பக்கட்ட பணிகள் துவங்கி நடைபெற்று வருகின்றன.

கயிறிழை மற்றும் கயிறு பொருட்களின் விற்பனையை புத்துயிரூட்ட, மத்திய அரசானது மூன்றாண்டு காலத்தின் சராசரி விற்பனையளவில் 10 விழுக்காடு தொகையை சந்தை மேம்பாட்டு உதவியாக வழங்குகிறது. இத்திட்டத்திற்கான நிதியை மத்திய அரசும், தமிழக அரசும் சரிபாதி விகிதத்தில் வழங்குகிறது. கயிறு பொருட்களின் விலையில், தள்ளுபடி விற்பனை செய்த பின்னர், அதற்குண்டான உதவியினை, இதன்மூலம் கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. 2010–2011ல் தமிழக அரசானது 64 கயிறு தொழில் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.47.75 இலட்சத்தை, இத்திட்டத்தின்கீழ், மத்திய அரசிற்கு இணையாக வழங்கியுள்ளது.

## தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (டான்சிட்கோ)

தமிழகத்தில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியையும், மேம்பாட்டையும் முக்கிய நோக்காக கொண்டு, மாநிலத்தில் சீரான தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த அரசுடைமை நிறுவனமாக தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் 1970–ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**37. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் ஆற்றும் முக்கிய பணிகள்**

1) தொழிற்பேட்டைகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல்
2) மூலப் பொருட்களை வழங்குதல்
3) விற்பனை உதவித்திட்டத்தின் கீழ் சந்தை வாய்ப்பளித்தல்
4) தொழில் முனைவோருக்கு வழிகாட்டுதல்

2010-11-ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் செயல்பாடுகளும் மற்றும் 2011-12 ஆம் ஆண்டில் நடைமுறைபடுத்த திட்டமிடப்பட்டிருக்கும் பல்வேறுபணிகளும் கீழே விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

**38. தொழிற்பேட்டைகளை அமைத்தல்**

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் தோற்றுவிக்கப்படுவதற்குமுன் தமிழக அரசு தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குநரகத்தின் மூலம் 35 தொழிற்பேட்டைகளை நிறுவியது. பின்னர் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் முற்றிலும் அதற்கு சொந்தமான 57 தொழிற்பேட்டைகளை உருவாக்கியது. தற்போது மொத்தம் 92 தொழிற்பேட்டைகள் இணைப்பு 1) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கீழ் இயங்கிவருகின்றன.

**அ, புதிய தொழிற்பேட்டைகள்**

100 தொழிற்பேட்டைகளை அமைத்து முடிக்கும் இலக்குடன் 8 இடங்களில் நிலங்கள் 2010-11 ஆம் ஆண்டில் நிலம் கையகப்படுத்துதல் / நிலமாற்றம் செய்தல் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | தொழிற்பேட்டையின் பெயர் | மாவட்டம் | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | வெண்மணிஆத்தூர் | விழுப்புரம் மாவட்டம் | 38.47 |
| 2 | இராசாத்தவலசு | திருப்பூர் மாவட்டம் | 52.34 |
| 3 | வாணியம்பாடி | வேலூார் மாவட்டம் | 7.08 |
| 4 | மரிக்குண்டு | தேனி மாவட்டம் | 79.43 |
| 5 | பிடாநேரி | தூத்துக்குடி மாவட்டம் | 108.23 |
| 6 | மாத்துார் | புதுக்கோட்டை மாவட்டம் | 19.92 |
| 7 | பாலையப்பட்டி | தஞ்சாவூர் மாவட்டம் | 103.03 |
| 8 | விருதுநகர் (நகர்புறம்) | விருது நகர் மாவட்டம் | 37.54 |
| **மொத்தம்** | | | **446.04** |

**ஆ. நிலம் கண்டறிதல்**

தொழிற்பேட்டைகளை தொடர்ந்து உருவாக்குவதற்கு நிலம் கண்டறிதல் ஒரு தொடர் நிகழ்வாக இருக்க வேண்டிய நிலை உள்ளது. எனவே 2256.01 ஏக்கர் நிலங்கள் கீழ்க்கண்ட 25 இடங்களில் கண்டறியப்பட்டு நில மாற்றம் / நிலம் கையகப்படுத்துதல் மூலமாக நிலங்களை பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:–

**25 புதிய தொழிற்பேட்டைகள்**

| வ. எண் | தொழிற்பேட்டையின் பெயர் | மாவட்டம் | பரப்பளவு (ஏக்கரில் ) |
|---|---|---|---|
| 1 | சேடப்பட்டி | மதுரை மாவட்டம் | 51.00 |
| 2 | வைப்பூர் | திருவாரூர் மாவட்டம் | 58.00 |
| 3 | தண்டரை | காஞ்சிபுரம் மாவட்டம் | 40.86 |
| 4 | போளூர் | திருவண்ணாமலை மாவட்டம் | 60.66 |
| 5 | சங்ககிரி | சேலம் மாவட்டம் | 53.52 |
| 6 | வடமுகம் காங்கேயம் பாளையம் | ஈரோடு மாவட்டம் | 50..00 |
| 7 | கண்டியன்கோயில் | கோயம்புத்தூர் மாவட்டம் | 250.00 |
| 8 | நஞ்சைஊத்துக்குளி (நிலை 2) | ஈரோடு மாவட்டம் | 56.62 |
| 9 | வாழ்க்கை | திருவாரூர் மாவட்டம் | 51.07 |
| 10 | இடையக்கோட்டை | திண்டுக்கல் மாவட்டம் | 116.55 |
| 11 | கட்டமடுவு | திருவண்ணாமலை மாவட்டம் | 83.80 |
| 12 | நெரூர் வடபாகம் | கரூர் மாவட்டம் | 59.89 |
| 13 | சடையம் பாளையம் | திருப்பூர் மாவட்டம் | 59.00 |
| 14 | செங்கரை | திருவள்ளூர் மாவட்டம் | 43.11 |

| | | | |
|---|---|---|---|
| 15 | சத்திரப்பட்டி | விருதுநகர் மாவட்டம் | 60.00 |
| 16 | ஏ. சாத்தனூர் | விழுப்புரம் மாவட்டம் | 215.00 |
| 17 | மணவாசி | கரூர் மாவட்டம் | 121.58 |
| 18 | அல்லாலசேரி மற்றும் நாகலேரி | வேலூர் மாவட்டம் | 40.00 |
| 19 | மயிலேரிபாளையம் | கோயம்புத்தூர் மாவட்டம் | 22.23 |
| 20 | காவேரிராஜபுரம் | திருவள்ளூர் மாவட்டம் | 135.18 |
| 21 | ஏனம்பாக்கம் | திருவள்ளூர் மாவட்டம் | 200.00 |
| 22 | குருக்கள்பட்டி | திருநெல்வேலி மாவட்டம் | 98.76 |
| 23 | பட்டணம் | விழுப்புரம் மாவட்டம் | 88.34 |
| 24 | பொன்னாக்குடி | திருநெல்வேலி மாவட்டம் | 96.90 |
| 25 | ஆசனூர் (நிலை 2) | விழுப்புரம் மாவட்டம் | 143.94 |
| | **மொத்தம்** | | **2256.01** |

**இ. அடுக்குமாடித் தொழிற்கூடங்கள்**

குறுந் தொழில் நிறுவனங்களுக்கென அடுக்குமாடித் தொழிற்கூட வளாகங்கள் கீழ்க் காணும் இடங்களில் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| வரிசை எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | கிண்டி | சென்னை |
| 2 | திருமழிசை | திருவள்ளூர் |
| 3 | மாதவரம் | திருவள்ளூர் |
| 4 | அம்பத்தூர் | திருவள்ளூர் |
| 5 | பெருங்குடி | காஞ்சிபுரம் |

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக கிண்டி தொழிற்பேட்டையில் 1.91 ஏக்கர் பரப்புள்ள அரசு நிலத்தை பயன்படுத்திக் கொள்ள தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு முன் நுழைவு அனுமதி அரசால் வழங்கப்பட்டுள்ளது. இதனையமைக்க ரூ. 28 கோடி திட்ட மதிப்பீட்டிற்கு சிட்கோ குழுமம் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

**39. 2010– 11 ஆண்டில் தொழிற்கூடங்கள் / தொழில் மனைகள் விற்பனை மற்றும் 2011 – 12 ஆம் ஆண்டிற்கான இலக்கு**

**(ரூ. இலட்சங்களில்)**

| வ எண் | விவரங்கள் | 2010–11 ஆம் ஆண்டிற்கான இலக்கு | | 2010–11 ஆம் ஆண்டின் சாதனை | | 2011–12 ஆம் ஆண்டிற்கான இலக்கு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | மதிப்பு | எண்ணிக்கை | மதிப்பு | எண்ணிக்கை | மதிப்பு |
| 1 | உருவாக்கப்பட்ட மனைகள் | 244 | 1795.90 | 317 | 901.66 | 260 | 1928.37 |
| 2 | விற்பனை செய்யப்பட்ட மனைகள் | 669 | 4388.26 | 110 | 1430.53 | 932 | 6787.16 |
| 3 | விற்பனை செய்யப்பட்ட தொழிற்கூடங்கள் | 16 | 165.11 | 2 | 8.20 | 10 | 155.86 |

**40. புதிய / இயங்கும் தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்புகளை உருவாக்குதல் / மேம்படுத்துதல் குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் (உட்கட்டமைப்பு மேம்பாடு)**

குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டத்தின் (உட்கட்டமைப்பு மேம்பாடு) கீழ் தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் புதிய / இயங்கும் தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்புகளை உருவாக்கியும் / மேம்படுத்தியும் வருகிறது.

அ) புதிய தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்புகளை உருவாக்குதல்

2009–10 ஆம் ஆண்டு வரை 6 புதிய தொழிற்பேட்டைகளில் ரூ 2505.90 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் உட்கட்டமைப்புகளை உருவாக்க ஒப்பளிப்பு பெறப்பட்டு, அனைத்து திட்டங்களிலும் பணிகள் முழுமையாக நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன.

2010–11 ஆம் ஆண்டில் 5 புதிய தொழிற்பேட்டைகளில் ரூ 1212.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் உட்கட்டமைப்புகளை உருவாக்க, ஒப்பளிப்பு பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | தொழிற்பேட்டைகளின் விவரம் | ஒப்பளிப்பு பெறப்பட்ட திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | மத்திய அரசிடமிருந்து பெறத் தகுதியான மானியம் |
|---|---|---|---|
| 1 | ஆசனூர், விழுப்புரம் மாவட்டம் | 395.00 | 237.00 |
| 2 | எலம்பலூர், பெரம்பலூர் மாவட்டம் | 146.00 | 87.60 |
| 3 | கடகத்தூர், தருமபுரி மாவட்டம் | 40.00 | 24.00 |
| 4 | போலுப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் | 411.00 | 246.60 |
| 5 | அரக்கோணம், வேலூர் மாவட்டம் | 220.00 | 132.00 |
| | **மொத்தம்** | **1212.00** | **727.20** |

மேற்கண்ட திட்டங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 70% பணிகள் முடிவடைந்துள்ளன.

ஆ) இயங்கும் தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துல்

2009 -10ஆம் ஆண்டுவரை 6 இயங்கும் தொழிற்பேட்டைகளில் ரூ 581.90 இலட்சம் திட்டமதிப்பீட்டில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த, ஒப்பளிப்பு பெறப்பட்டு, அனைத்து திட்டங்களிலும் பணிகள் முழுமையாக நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளன.

2010-11ஆம் ஆண்டில் 3 இயங்கும் தொழிற்பேட்டைகளில் ரூ.1070.29 இலட்சம் திட்டமதிப்பீட்டில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த ஒப்பளிப்பு பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | தொழிற்பேட்டைகளின் விவரம் | ஒப்பளிப்பு பெறப்பட்ட திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | மத்திய அரசிடமிருந்து பெறத் தகுதியான மானியம் |
|---|---|---|---|
| 1 | ஆலத்தூர், காஞ்சிபுரம் மாவட்டம் | 444.96 | 267.00 |
| 2 | காக்களூர் (பகுதி 1), திருவள்ளூர் மாவட்டம் | 423.33 | 254.00 |
| 3 | கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் | 202.00 | 121.20 |
| மொத்தம் | | **1070.29** | **642.20** |

பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 30% பணிகள் முடிவடைந்துள்ளன.

**41. தமிழக அரசின் பகுதி 2 திட்டம்**

2006-07 ஆம் ஆண்டு முதல் 2008-09ஆம் ஆண்டு வரை 9 இயங்கும் தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்புகள் ரூ 335.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | ஆண்டு | உருவாக்குதல் / மேம்படுத்துதல் | பயன்பெற்ற தொழிற்பேட்டை களின் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | செலவு (ரூ. இலட்சத்தில்) | மாநில அரசு மானியம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | 2006–07 | மேம்படுத்துதல் | 3 | 101.50 | 101.50 | 25.00 |
| 2. | 2007–08 | மேம்படுத்துதல் | 3 | 114.00 | 114.00 | 25.00 |
| 3. | 2008–09 | மேம்படுத்துதல் | 3 | 120.00 | 120.00 | 20.00 |
| மொத்தம் | | | 9 | 335.50 | 335.50 | 70.00 |

அனைத்து திட்டங்களிலும் பணிகள் முடிவடைந்துவிட்டன.

2011-12ஆம் நிதியாண்டில் ரூ150.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 5 தொழிற்பேட்டைகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக அரசின் மானியம் ரூ 30.00 இலட்சம் கோரப்பட்டுள்ளது.

**42. தொழில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்**

அம்பத்தூர், திருமழிசை மற்றும் திருமுடிவாக்கம் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த இத்திட்டத்தின் கீழ் ரூ.4900.00 இலட்சம் உதவி பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பணிகள் ''சென்னை தானியங்கி துணைத் தொழில்கள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம்'' என்ற சிறப்பு நோக்கு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் இத்திட்டத்திற்கு ரூ 1210.00 இலட்சம் ஏற்றுமதி மற்றும் அதை சார்ந்த செயல்பாடுகளுக்கான மாநிலங்களுக்கு உதவும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இடைவெளி தொகையாக வழங்கப்பட்டுள்ளது. ரூ 4500.00 இலட்சத்திற்கான பணிகள் முடிவடைந்துவிட்டன. எஞ்சியுள்ள பணிகள் 30.9.2011–க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது

**43. ஏற்றுமதி மற்றும் அதைச் சார்ந்த செயல்பாடுகளுக்கான மாநிலங்களுக்கு உதவும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம்**

கிண்டி திரு வி க தொழிற்பேட்டையின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த ரூ.2794.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கிண்டி தொழிற்பேட்டை உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் இத்திட்டத்தின் கீழ் பணிகளை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் ரூ 2239.00 இலட்சத்திற்கான பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சியுள்ள பணிகள் 30.9.2011 முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**44. சிட்கோ தலைமையகம் அமைத்தல்**

கிண்டி திரு.வி.க தொழிற்பேட்டையில் 1.47 ஏக்கர் நிலப்பரப்பில் சிட்கோ தலைமையகம் அமைக்கும் பணி ரூ 44.40 கோடி திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. இது அடித்தளம், தரைத்தளம் மற்றும் 9 மேல்தளங்களை கொண்டதாகவும் நவீன வசதிகளுடன் கூடியதாகவும் அமைக்கப்படவிருக்கிறது. தொழில் முனைவோர்களின் நலன் கருதி தொழில் மற்றும் வணிகத்துறை இயக்குனரகமும், தொழில்முனைவோர் மேம்பாட்டு மையமும் இதே வளாகத்தில் அமைக்கப்படவுள்ளது. கட்டுமானப் பணிகள் டிசம்பர் 2012–இல் முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**45. சிட்கோ வர்த்தக மையம்**

குறு , சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பொருட்களை கண்காட்சிக்கு வைக்கவும், கருத்தரங்குகள் மற்றும் பொருட்காட்சிகள் நடத்தவும், தொழிலாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு அவர்களுடைய திறமையை வளர்த்துக் கொள்ள பயிற்சிகளை நடத்தவும், சிட்கோ வர்த்தக மையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இது ஒரு கண்காட்சி மையத்தையும், கருத்தரங்கு கூடத்தையும் மற்றும் பயிற்சி மையத்தையும் கொண்டதாக அமைக்கப்படவிருக்கிறது.

இதற்கான திட்ட மதிப்பீடு ரூ 70.00 கோடி என மதிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்கண்ட திட்ட செலவை தொழில் மற்றும் வணிகத் துறை இயக்குனரகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற கழகம், தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு சிறு மற்றும் குறுந்தொழில் நிறுவனங்களின் சங்கம் ஆகியவற்றின் பங்காகவும், மீதமுள்ள தொகையினை மத்திய அரசு நடைமுறைபடுத்தி வரும் திட்டங்களில் ஒன்றின் மூலமாகப் பெறவும் திட்டமிடப்பட்டுள்ளது. கிண்டி திரு வி க தொழிற்பேட்டையில் அரசுக்குச் சொந்தமான 2.99 ஏக்கர் நிலத்தை தொழில் மற்றும் வணிகத்துறை

இயக்குனகரத்தின் பங்காக வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் மேற்கண்ட அரசுத் துறைகள் / நிறுவனங்கள் மற்றும் தொழில் சங்கத்தின் இசைவைப் பெற்றும் தமிழக அரசின் அனுமதி பெற்றும் செயல்படுத்தப்படும்.

**46. மூலப்பொருட்கள் வழங்குதல்**

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு தரமான மூலப்பொருட்களை, நியாயமான விலையில் வழங்குவது, இந்நிறுவனத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். அம்பத்தூர், கோயமுத்தூர், மதுரை, திருச்சி, சாத்தூர் மற்றும் சிவகாசி ஆகிய மூலப்பொருட்கள் கிடங்குகளின் வழியாகவும் ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய கிளை அலுவலகங்களின் வழியாகவும் மூலப்பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனத்தால் விநியோகிக்கப்படும் மூலப்பொருட்கள் பின்வருமாறு:–

1) இரும்பு மற்றும் எஃகு
2) மெழுகு
3) பொட்டாசியம் குளோரேட் மற்றும்
4) தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகிதம்

2010-11ஆம் நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கும் அடைந்த சாதனைகளும், 2011-12ஆம் நிதியாண்டிற்கான இலக்கும் பின்வருமாறு:-

| வ. எண் | மூலப் பொருட்கள் | 2010–11–ஆம் ஆண்டிற்கான இலக்கு | | 2010–11 –ஆம் ஆண்டிற்கான சாதனை | | 2011–12–ஆம் ஆண்டிற்கான இலக்கு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அளவு மெ. டன்னில் | மதிப்பு இலட்சத்தில் | அளவு மெ. டன்னில் | மதிப்பு இலட்சத்தில் | அளவு மெ. டன்னில் | மதிப்பு இலட்சத்தில் |
| 1 | இரும்பு மற்றும் எஃகு | 7500.00 | 3000.00 | 4730.450 | 1826.49 | 9800.00 | 3920.00 |
| 2 | பாரபின் மெழுகு | 6000.00 | 4800.00 | 3927.000 | 2999.34 | 6000.00 | 5220.00 |
| 3 | டி.என்.பி. எல் பேப்பர் | 2350.00 | 1095.00 | 1270.780 | 639.43 | 4300.00 | 2091.75 |
| 4 | பொட்டாசியம் குளோரேட் | 60.00 | 37.50 | 4.000 | 2.67 | 50.00 | 34.00 |
| மொத்தம் | | **15910.00** | **8932.50** | **9932.230** | **5467.93** | **20150.00** | **11265.75** |

**47. விற்பனையில் உதவி**

இத்திட்டத்தின் கீழ் மாநில அரசுத் துறைகள் / நிறுவனங்கள் வெளியிடும் ஒப்பந்தப் புள்ளிகளில் சிட்கோவின் விற்பனை உதவித் திட்டத்தின் கீழ் பதிவு செய்த குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் சார்பாக சிட்கோ பங்கேற்கிறது. பெறப்பட்ட வழங்கல் ஆணைகள் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு பிரித்தளிக்கப்படுகின்றன. தரமான பொருட்களை சரியான நேரத்தில்

வழங்குமாறு கண்காணிக்கப்படுகிறது. வழங்கப்பட்ட பொருட்களுக்கு அரசுத் துறைகள் / பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து தொகை பெறப்பட்டு குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

2010-11-ஆம் நிதியாண்டில் ரூ 123.34 இலட்சம் மதிப்பிலான வழங்கல் ஆணைகளை நிறைவேற்றியிருக்கிறது. ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைவதற்காக 2011-12 ஆம் ஆண்டிற்கான இலக்கு ரூ. 42.45 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**48. மின் ஆளுகை**

ஒரு சிறந்த மின் ஆளுகையை உருவாக்க சிட்கோ அதனுடைய அனைத்து பணிகளையும் கணினி மயமாக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. தற்போது ஒதுக்கீட்டிற்கான விண்ணப்ப படிவங்களை சிட்கோவின் வலை தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒதுக்கீட்டிற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை மின் அஞ்சலில் சமர்ப்பிக்க மென் பொருள் ஒன்றை தேசிய தகவல் மையத்துடன் இணைந்து தயாரித்து வருகிறது. மென் பொருள் தயாரிக்கும் பணி இறுதி நிலையில் உள்ளது. இவை தவிர சிட்கோவின் அனைத்து பணிகளையும் கணினி மயமாக்கும் பணி தமிழ்நாடு மின்னனு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**49. நிதி நிலை அறிக்கை**

**2006–07 முதல் 2010–11** **(ரூபாய் இலட்சங்களில்)**

| வ. எண் | விவரங்கள் | 2006-07 | 2007-08 | 2008-09 | 2009-10 | 2010–11 (துற்காலிகமாக) |
|---|---|---|---|---|---|---|
| 1 | மனைகள் மற்றும் தொழிற்கூட விற்பனைகள் மூலம் வருவாய் | 4216.73 | 6322.23 | 8059.68 | 9496.71 | 7782.81 |
| 2 | இதர வருவாய் | 1544.79 | 1945.24 | 1833.55 | 2126.51 | 1815.64 |
| 3 | மொத்தம் | 5761.52 | 8267.48 | 9893.23 | 11623.22 | 9598.45 |
| 4 | இலாபம் | 606.52 | 848.44 | 309.52 | 2180.31 | 1515.77 |
| 5 | மனைகள் / தொழிற்கூடங்கள் விற்பனையில் அரசுக்கு செலுத்தப்பட்ட தொகை | 1904.73 | 111.22 | 132.02 | 117.90 | 130.69 |
| 6 | அரசுக்கு செலுத்தப்பட்ட ஈவுத் தொகை | **87.00** | **87.00** | **87.00** | **87.00** | **-----** |

# தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)

**50. செயலாக்க திட்டம்**

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) கடந்த 1965 ல் துவக்கப்பட்டது. தற்சமயம் தமிழ்நாடு முழுவதும் 40 உற்பத்திக் கூடங்களும் சென்னையில் 1 காட்சியகமும் உள்ளது.

**கடந்த 5 ஆண்டுகளின் செயல்பாடுகள் (துணிக்கைக்குப்பின்) :–**

**(ரூ. இலட்சத்தில்)**

| | 2005–06 | 2006–07 | 2007–08 | 2008–09 | 2009–10 |
|---|---|---|---|---|---|
| உற்பத்தி | 6040 | 6083 | 11538 | 12831 | 16732 |
| விற்பனை | 6180 | 5767 | 11380 | 12355 | 17026 |
| இலாபம் | 52 | 95 | 725 | 5237 | 2020 |

**2010–11ஆம் ஆண்டின் செயல்பாடு மற்றும் 2011–12ன் இலக்கு**

**(ரூ. இலட்சத்தில்)**

| | **2010–11ன்** செயல்பாடு | **2011–12ன்** இலக்கு |
|---|---|---|
| உற்பத்தி | 9862.00 | 11200.00 |
| விற்பனை | 9907.53 | 11200.00 |
| செய்முறை இலாபம் | 2241.87 (துணிக்கைக்குமுன்) | 2162.41 (தோராயமாக) |

**51. உலகத் தர சான்றிதழ் (ISO – 9001–2000)**

அம்பத்துார் மற்றும் திருச்சியிலுள்ள இரு ஆழ் குழாய் கைப்பம்பு நிறுவனங்கள், வேலுார், பழனி, இராஜபாளையத்திலுள்ள அறைகலன்கள் மற்றும் டான்சியின் துணை நிறுவனமான தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள் (டாப்பாப்) உலகத் தரச் சான்றிதழை (ISO 9001–2000) பெற்றுள்ளது.

**52. துணை நிறுவனம் – டாபாப்**

டாபாப் நிறுவனம் டான்சியின் துணை நிறுவனம். இது, சிவப்பு ஆக்ஸைடு வர்ணம், சாலைகளில் போக்குவரத்து அடையாளக் குறி இடுகின்ற இரப்பர் கலந்த வர்ணம், மற்றும் இதர வர்ணங்களை உற்பத்தி செய்து வருகிறது.

**கடந்த 5 ஆண்டுகளின் செயல்பாடுகள் (துணிக்கைக்குப்பின்) :–**

**(ரூ. இலட்சத்தில்)**

| | **2005–06** | **2006–07** | **2007–08** | **2008–09** | **2009–10** |
|---|---|---|---|---|---|
| **உற்பத்தி** | 191.72 | 167.83 | 358.23 | 310.94 | 329.94 |
| விற்பனை | 192.76 | 173.09 | 358.59 | 307.74 | 331.23 |
| இலாபம் | 4.50 | 2.53 | 16.67 | 4.90 | 26.95 |

**2010–11ஆம் ஆண்டின் செயல்பாடு மற்றும் 2011–12ன் இலக்கு:**

**(ரூ. இலட்சத்தில்)**

| | **2010–11**ன் செயல்பாடு | **2011–12**ன் இலக்கு |
|---|---|---|
| **உற்பத்தி** | 317.08 | 335.00 |
| விற்பனை | 317.30 | 335.00 |
| செய்முறை இலாபம் | 14.79 (துணிக்கைக்குமுன்) | 24.27 (தோராயமாக) |

**53. இலாபம்**

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் 40 உற்பத்தி அலகுகளும் இலாபத்தில் இயங்கிவருகின்றன. டான்சியின் மொத்த நட்டமும் ஈடு செய்யப்பட்டுள்ளது.

## இணைப்பு–1

**சிட்கோ தற்பொழுது நிர்வகித்துவரும் 92 தொழிற்பேட்டைகளின் விவரம் பின்வருமாறு:-**

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் மற்றும் தொழிற்பேட்டை பெயர் | ஆரம்பிக்கப் பட்ட வருடம் | பரப்பளவு ஏக்கரில் |
|---|---|---|---|
| | 1. சென்னை மாவட்டம் | | |
| 1 | கிண்டி (அ) | 1958 | 404.08 |
| 2 | அரும்பாக்கம் (சி) | 1979 | 3.92 |
| 3 | வில்லிவாக்கம் (சி) | 1979 | 2.04 |
| 4 | கொடுங்கையூர்(சி) | 1979 | 7.88 |
| | | | |
| | 2. திருவள்ளூர் மாவட்டம் | | |
| 5 | அம்பத்தூர் (அ) | 1963 | 1167 |
| 6 | காக்களூர் (அ) | 1988 | 199 |
| 7 | காக்களூர் (பகுதி 2) (அ) | 2009 | 84.01 |
| 8 | திருமழிசை (சி) | 1988 | 160.85 |
| 9 | கும்மிடிபூண்டி (சி) | 1988 | 25.24 |
| 10 | ஆர்.கே.பேட்டை (சி) | 1996 | 8.15 |
| 11 | விச்சூர் (சி) | 1984 | 59.16 |
| 12 | திருமுல்லைவாயல் (ம.தொ.பே.) (சி) | 2001 | 225.88 |
| | | | |
| | 3. காஞ்சிபுரம் மாவட்டம் | | |
| 13 | காஞ்சிபுரம் (அ) | 1968 | 37.95 |
| 14 | மறைமலைநகர் (சி) | 1981 | 39.50 |
| 15 | ஆலத்தூர் (சி) | 1984 | 150.00 |
| 16 | திருமுடிவாக்கம் (சி) | 1993 | 201.11 |
| | | | |
| | 4. வேலூர் மாவட்டம் | | |
| 17 | காட்பாடி (அ) | 1968 | 19.48 |
| 18 | அரக்கோணம் (அ) | 1968 | 11.09 |
| 19 | அரக்கோணம் (பகுதி 2) (அ) | 2009 | 40.65 |
| 20 | ராணிப்பேட்டை (சி) | 1972 | 113.44 |
| 21 | முகுந்தராயபுரம் (சி) | 1980 | 86.19 |
| 22 | வன்னிவேடு (சி) | 1987 | 16.44 |

| | | | |
|---|---|---|---|
| 23 | விண்ணமங்கலம் (சி) | **2009** | 10.49 |
| | திருவண்ணாமலை மாவட்டம் | | |
| 24 | திருவண்ணாமலை (அ) | 1968 | 15.56 |
| | | | |
| | 6. கிருஷ்ணகிரி மாவட்டம் | | |
| 25 | கிருஷ்ணகிரி (அ) | 1965 | 41.86 |
| 26 | ஓசூர் (சிப்காட்) (சி) | 1976 | 95.15 |
| 27 | ஓசூர் (பேருந்து நிலையம் அருகில்) (சி) | 1999 | 18.80 |
| 28 | ஊத்தங்கரை (சி) | 1995 | 41.28 |
| 29 | பர்கூர் (சி) | 1995 | 13.05 |
| 30 | பர்கூர் (பகுதி 2) (சி) | **2009** | 18.59 |
| 31 | போளுப்பள்ளி (சி) | **2009** | 60.96 |
| | | | |
| | 7. தர்மபுரி மாவட்டம் | | |
| 32 | தர்மபுரி (அ) | 1965 | 20.28 |
| 33 | கடகத்தூர் (சி) | **2009** | 7.02 |
| | | | |
| | 8. சேலம் மாவட்டம் | | |
| 34 | சேலம் (அ) | 1967 | 19.55 |
| 35 | மேட்டூர் (அ) | 1967 | 184.38 |
| 36 | கருப்பூர் (ம.தொ.பே.) (சி) | 2004 | 51.70 |
| 37 | வீரபாண்டி (சி) | 1993 | 9.79 |
| | | | |
| | 9. நாமக்கல் மாவட்டம் | | |
| 38 | நாமக்கல் (சி) | 1977 | 10.09 |
| 39 | திருச்செங்கோடு (சி) | 1980 | 9.18 |
| | | | |
| | 10. ஈரோடு மாவட்டம் | | |
| 40 | ஈரோடு (அ) | 1959 | 25.13 |
| 41 | நஞ்சை ஊத்துக்குளி (சி) | 1995 | 13.05 |
| | | | |
| | 11. கோயம்புத்தூர் மாவட்டம் | | |
| 42 | குறிச்சி (அ) | 1972 | 88.43 |

| | | | |
|---|---|---|---|
| 43 | மலுமிச்சம்பட்டி (சி) | 1994 | 36.14 |
| | 12. திருப்பூர் மாவட்டம் | | |
| 44 | கணபதிபாளையம் (சி) | 1993 | 17.10 |
| 45 | திருப்பூர் (சி) | 1978 | 10.14 |
| 46 | குடிமங்கலம் (சி) | 1992 | 6.74 |
| | | | |
| | 13. நீலகிரி மாவட்டம் | | |
| 47 | ஊட்டி (சி) | 1981 | 10.65 |
| | | | |
| | 14. கடலூர் மாவட்டம் | | |
| 48 | கடலூர் (அ) | 1971 | 15.60 |
| 49 | வடலூர்(அ) | 1972 | 26.22 |
| | | | |
| | 15. விழுப்புரம் மாவட்டம் | | |
| 50 | ஆசனூர் (அ) | 2009 | 107.80 |
| | | | |
| | 16. பெரம்பலூர் மாவட்டம் | | |
| 51 | எலம்பலூர்(சி) * | 2009 | 44.48 |
| | | | |
| | 17. தஞ்சாவூர் மாவட்டம் | | |
| 52 | கும்பகோணம் (அ) | 1968 | 32.30 |
| 53 | தஞ்சாவூர் (அ) | 1968 | 21.94 |
| 54 | பிள்ளையார்பட்டி (சி) | 1974 | 10.96 |
| 55 | நாஞ்சிக்கோட்டை (சி) | 1996 | 26.30 |
| | | | |
| | 18. நாகப்பட்டினம் மாவட்டம் | | |
| 56 | நாகப்பட்டினம் (அ) | 1966 | 20.97 |
| 57 | மயிலாடுதுறை (சி) | 2009 | 12.56 |
| | | | |
| | 19. திருச்சி மாவட்டம் | | |
| 58 | தூவாக்குடி (அ) | 1974 | 478.38 |
| 59 | திருவெறும்பூர் (அ) | 1974 | 74.50 |
| 60 | அரியமங்கலம் (அ) | 1974 | 17.64 |
| 61 | வாழவந்தான்கோட்டை (ம.தொ.பே.) (சி) | 2003 | 51.70 |

| | | | |
|---|---|---|---|
| 62 | வாழவந்தான்கோட்டை (பகுதி 2) (சி) | 2008 | 87.18 |
| 63 | வாழவந்தான்கோட்டை (பகுதி 3) (சி) | 2009 | 26.84 |
| 64 | கும்பக்குடி (சி) | 2009 | 24.46 |
| | | | |
| | 20. கரூர் மாவட்டம் | | |
| 65 | கரூர் (அ) | 1974 | 26.63 |
| 66 | கரூர் ஆத்தூார் (சி) | 1993 | 36.29 |
| | | | |
| | 21. புதுக்கோட்டை மாவட்டம் | | |
| 67 | புதுக்கோட்டை (அ) | 1974 | 23.18 |
| 68 | மாத்தூர் (சி) | 1975 | 26.00 |
| 69 | புதுக்கோட்டை (சிப்காட்) (சி) | 1988 | 51.45 |
| | | | |
| | 22. தேனி மாவட்டம் | | |
| 70 | தேனி (அ) | 1963 | 26.59 |
| 71 | ஆண்டிப்பட்டி (சி) | 1994 | 22.34 |
| | | | |
| | 23. திண்டுக்கல் மாவட்டம் | | |
| 72 | திண்டுக்கல் (அ) | 1965 | 39.90 |
| 73 | வத்லகுண்டு (அ) | 1965 | 16.26 |
| | | | |
| | 24. மதுரை மாவட்டம் | | |
| 74 | மதுரை (கே.புதூர்) (அ) | 1960 | 56.05 |
| 75 | கப்பலூர் (அ) | 1966 | 534.64 |
| 76 | கப்பலூர் (ம.தொ.பே) (சி) | 2007 | 18.90 |
| | | | |
| | 25. இராமநாதபுரம் மாவட்டம் | | |
| 77 | பரமக்குடி (சி) | 1976 | 10.00 |
| 78 | கீழநாகாச்சி (சி) | 1993 | 10.00 |
| 79 | உரப்புளி (சி) | 1993 | 12.14 |
| | 26. சிவகங்கை மாவட்டம் | | |
| 80 | காரைக்குடி (அ) | 1966 | 180.19 |
| 81 | சிவகங்கை (அ) | 1966 | 70.61 |

| | | | |
|---|---|---|---|
| 82 | கிருங்காக்கோட்டை (சி) | 1993 | 21.85 |
| | 27. விருதுநகர் மாவட்டம் | | |
| 83 | விருதுநகர் (அ) | 1958 | 45.65 |
| 84 | ராசபாளையம் (சி) | 1995 | 41.13 |
| | | | |
| | 28. திருநெல்வேலி மாவட்டம் | | |
| 85 | பேட்டை (அ) | 1959 | 50.55 |
| 86 | கடையநல்லூார் (சி) | 1992 | 10.00 |
| 87 | வள்ளியூர் (சி) | 2005 | 16.75 |
| 88 | வள்ளியூர் (பகுதி 2) (சி) | **2010** | 23.16 |
| | | | |
| | 29. தூத்துக்குடி மாவட்டம் | | |
| 89 | கோவில்பட்டி (அ) | 1962 | 85.54 |
| 90 | தூாத்துக்குடி (சி) | 1988 | 24.18 |
| | | | |
| | 30. கன்னியாகுமரி மாவட்டம் | | |
| 91 | கோணம் (அ) | 1964 | 20.70 |
| 92 | மார்த்தாண்டம் (அ) | 1964 | 7.50 |
| | | | |
| | **மொத்தம்** | | **6,486.18** |

குறிப்பு

(அ) – அரசு தொழிற் பேட்டைகள்

(சி) – சிட்கோ தொழிற் பேட்டைகள்